இலவச காலாண்டு சமய இதழ்



# அகர தீபம்

www.akaram.eu

14.07.2023 - 13.10.2023




## துளசிதாசருக்கு உதவிய அனுமன்..!!

9 ஆம் ஆண்டில்

## பொன்னாலை வரதராஜப் பெருமாள்

மாலை : 08 மலர் : 02

திருவள்ளுவர் ஆண்டு 2052

# நுழைவாயில்..

**அகரதீபம்**
**ஆன்மீக அன்பர்களுக்கு**
**வணக்கம்.**



இந்த இதழில் ஆன்மீகம் என்றால், அதனை இந்த உலகம் எப்படிப் பார்க்கிறது? அதனை நாம் எமது மதத்திலும், கலாசாரத்திலும் எப்படிப் புரிந்து, எமது நம்பிக்கையை வளர்த்து வருகிறோம்? என்பதை மறு பார்வைக்கு உட்படுத்த வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளது. உலக அரசுகள் நடத்தும் போர் முறைகளுடன் ஒப்பு நோக்கிப் பார்க்க வேண்டிய அவசியத்தைக் கடந்த சில மாதங்களாகப் பல உயிர்கள் உடைமைகளை அழித்தும், முடிவைக் காண முடியாத அனுமாரின் வால் போல நீண்டு கொண்டே செல்லும் உக்கிரெயின் ரஷ்யப் போர் பற்றி, நாம் மிக ஆழமாக யோசித்தால், எமது ஆன்மீக அறிவும், உலக நாடுகள் பார்க்கும் மதமும், மத நம்பிக்கைகளும் ஆன்மீகப் புரிதலில் பாரிய முரண்பாடுகளைக் கொண்டிருப்பதைக் காணலாம்.

நாம், நமது இனஅழிப்பு தொடர்பாக எமது ஆன்மீகத்தையும், கடவுள் நம்பிக்கையையும் மீள் பார்வைக்கு உட்படுத்தி, உலகத்தோடு ஒன்றி வாழ்வதும், ஆன்மீகத்தின் கட்டாயத் தேவை என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும். அதன்படியே எமது வாழ்வியல் ஆன்மீகத்தை, உலக அரசியல் நீரோட்டத்துடன் இணைத்துப் பார்க்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகிறது. அத்தகைய முயற்சியில் 'அறிவோம் ஆன்மீகம்' தொடர் இந்த இதழில் அறிமுகமாகிறது. வாசகர் தமது கருத்துகளைத் தந்தால், எம் இனத்தின் ஆன்மீக வாழ்வைத் திட்டமிட்டு, உலக அரசியலுடன் பயணிக்க நம் இனத்தை வழிநடத்தலாம். எனவே, உங்களின் கருத்தை வழங்கிச் சிறப்பிக்கத் தயவாகக் கேட்டுக் கொள்கிறோம்.

அடுத்த இதழில் சந்திக்கும் வரை எல்லாம் வல்ல இறைவன் திருவடிகளைப் பணிந்து, எல்லாரும் இன்புற்றிருக்க விடை பெறும்,

**ஆசிரியர், அகர தீபம்.**



# கர்ணன் கற்றது வித்தை அல்ல!

தேரோட்டியான அதிரதன் மற்றும் ராதையினால் வளர்க்கப்பட்டவன் கர்ணன். பிறப்பால் சத்ரியன். வீரத்துக்குக் குறைச்சல் இல்லை. இருந்தாலும், குரு வேண்டுமே? துரோணாச்சாரியார் மறுத்துவிட, கிருபாச்சாரியாரிடம் ஒரு நாள் அதிகாலை போகிறான் கர்ணன்.

மாணவர்களின் திறமையை சோதிக்க, வானத்தில் பறக்கும் ஒரு பறவையைக் குறிபார்த்து வீழ்த்தச் சொல்கிறார் குரு. அர்ஜுனன் ஒரே அம்பில் பறவையை வீழ்த்திவிட்டு தேரேறிப் போய்விட்டான்.

இப்போது, கர்ணனின் முறை. அம்பை நாணில் பூட்டியாயிற்று. ஒரு கணம் பறவையை வானில் குறி பார்த்தவன் வில்லையும், அம்பையும் கீழே வைத்து விட்டான். மிகச் சிறந்த வில் வீரனான கர்ணன் அப்படிச் செய்தது குருவுக்கு அதிசயம். காரணம் கேட்கிறார்.

குருவே இது மிகவும் அதிகாலை நேரம். இந்த நேரத்தில் ஒரு பறவை விண்ணில் பறக்கிறது என்றால், நிச்சயம் தன் குஞ்சுகளுக்கான உணவைக் கொண்டு போகிறது என்றுதான் பொருள். இப்போது திறமைக்காக அதைக் கொன்று விட்டால் நான் வீரனாவேன். ஆனால், அந்த இளம் குஞ்சுகள் அனாதை ஆகிவிடும். எனவே நான் கொல்ல மாட்டேன் என்றானாம்.

கலங்கிப்போன குரு சொன்னாராம், “கர்ணா நீ கற்றது வித்தை அல்ல வேதம்” என்று பாராட்டினார்!

பணத்தாலும், பதவியாலும், அதிகாரத்தாலும், நீங்கள் பலமானவர்களாக இருக்கலாம். அந்த பலத்தை உன்னை நேசிப்பவர்களிடமோ, அல்லது உன்னை விட பலம் குறைந்தவர்களிடமோ காட்டாதீர்கள்.




அகர தீபம்

மாலை : 08 மலர் : 02

தலைமை
**த. இரவீந்திரன்**

ஆசிரியர்
**ஆதவன்**

ஆசிரியர் குழு
**வியாசன்**

வடிவமைப்பு
**ஈழமயூரன்**

ஒப்பு நோக்குனர்
**திரு.செ. அமுதவாணன்**



தொடர்புகளுக்கு

European Tamils Union e.V.
PO. Box 13 06 31,
44316 Dortmund,
Germany.

00 49 176 47 11 87 11

Email : akaratheepam@akaram.eu




www.akaram.eu

GERMANY, SWITZERLAND, FRANCE
ENGLAND, DENMARK, NORWAY,
HOLLAND, SWEDEN, ITALY, CANADA



© ETU e.V.2014 All rights reserved



# துளசிதாசருக்கு உதவிய அனுமன்..!!

ஒருமுறை துளசிதாசர் ஆஞ்நேயரிடம் உங்களுக்கு ராம் - லட்சுமணரின் அனுக்கிரகம் கிட்டியது போல் எனக்கும் அவர்களின் தரிசனம் கிட்ட வேண்டும். அதற்கு நீங்கள் தான் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று மனமுருகப் பிரார்த்தித்தார்..!

துளசிதாசரின் வேண்டுகோளை ஏற்ற அஞ்சனை மைந்தன் அவரிடம், இதுதான் சித்ரக்கூடம்.. இந்த இடத்திற்கு ராமகிரி என்று பெயர்.! ராமன் வனவாசம் செய்த இடம்.. அங்கே பாரும் மந்தாகினி.. இங்கே உட்கார்ந்து, ராமஜபம் செய்யும்.. ராம தரிசனம் கிட்டும் என்று கூறினார்.!

அதற்கு துளசிதாசர் நீங்களும்கூட இருக்கவேண்டும் என்று வேண்டினார்..! நீர் ராம நாமம் சொன்னால், உமது கூடவே நானும் இருப்பேன். எனக்கு வேறு என்ன வேலை? என்று கூறி மறைந்து விட்டார் ஆஞ்சநேயர்.!

துளசிதாசரும் ராமஜபம் செய்ய ஆரம்பித்தார்.. மனதில் ராமர் வருவாரா..? எப்படி வருவார்? லட்சுமணனுடன் வருவாரா..? எப்படி இருப்பார்..? தலையில் ஜடாமுடியுடன் வருவாரா? (அ) வைரக்கிரீடம் அணிந்து வருவாரா..? மரவுரி தரித்து வருவாரா...? என்ற பல சிந்தனைகளோடு இடுப்பில் இருந்த துணியை வரிந்து கட்டிக் கொண்டார். கண்களை இமைக்காமல் அங்குமிங்கும் பார்த்துக் கொண்டிருந்தார்..!

மலைப்பாதை, ஒற்றையடிப் பாதை.. இருபுறமும் புதர் அங்கிருந்த பாறாங்கல்லில் நின்றுகொண்டு ராம, ராம என்று ஜபித்து நர்த்தனமாடினார் துளசி தாசர்..! மலை உச்சியில் இருந்து வேகமாக இரண்டு குதிரைகள் வந்தன.! அதன் மீது இரண்டு ராஜகுமாரர்கள்..துளசிதாசர் எத்தனையோ ராஜாக்களைப் பார்த்திருக்கிறார்..!

ஆனால் குதிரையில் வந்த ராஜகுமாரர்களோ தலையில் தலைப்பாகை.. அதைச் சுற்றி முத்துச் சரங்கள்.. கொண்டை மீது வெண்புறா இறகுகள் என்று வித்தியாசமாக இருந்தனர்..!

குதிரையில் வந்தவர்கள் தாசரைப்பார்த்துச் சிரித்துக் கொண்டே போய் விட்டனர்..!! தாசர் தன் மனதில், ஆமாம்' பெரிய வீரர்கள் இவர்கள்! என் ராம, இலட்சுமணனுக்கு ஈடாவார்களா?

தலையில் ரத்ன கிரீடமும், மார்பில் தங்கக் கவசமும், தங்க ஹாரமும், கையில் வில்லும், இடுப்பில் அம்புறாத் தூளியும், கையில் ஒரு அம்பைச் சுற்றிக் கொண்டே என்ன அழகாக இருப்பார் என் ராமர் என்று.

ராமனை தியானித்தவாறே ராம நாமத்தை ஜபித்துக் கொண்டிருந்தார்..! சிறிது நேரம் கழித்து அனுமன் வந்தார். தாசரைப் பார்த்து ராம லட்சுமணர்களைப் பார்த்தீர்களா? என்று கேட்டார்..!

இல்லையே...என்றார் தாசர். என்ன இது, உமது பக்கமாகத் தானே குதிரையில் சவாரி

செய்து கொண்டு வந்தார்கள் என்றார் அனுமன்..!

ஐய்யோ! வந்தவர்கள் ராம லட்சுமணர்களா? ஏமாந்து போனேனே! என்று புலம்பினார் துளசிதாசர்..!

அதற்கு அனுமன், ராமர் உமது இஷ்டப்படிதான் வரவேண்டுமா? அவர் இஷ்டப்படி வரக்கூடாதா? என்று கேட்டார்..!

உடனே தாசர், சுவாமி மன்னிக்க வேண்டும்.ஒன்றும் அறியாத பேதை நான்..! ஏதோ கற்பனை செய்து கொண்டு வந்தர்களை அலட்சியம் செய்து விட்டேன் வாயுகுமாரா.. இன்னும் ஒருமுறை தயவு செய்யும், அவர்கள் எந்த வடிவில் வந்தாலும் பார்த்து விடுகிறேன் என்றார்..!

அதற்கு அனுமன், எல்லாம் சரி, நீர் போய் மந்தாகினியில் இறங்கி, நீராடி ஜபம் செய்யும். ராமாயணப் பாராயணம் செய்யும்.. என்றார்...!

அன்றைய தினம் தாசர், ராமாயணத்தில் பரதன் சித்ரக் கூடத்திற்கு வரும் முன்பு ராம, லட்சுமணர்கள் சித்ரக் கூடத்தில் வசித்துக் கொண்டு காலையில் மந்தாகினியில் நீராடுகிறார்கள் என்று கட்டத்தைப் படித்துக் கொண்டிருந்தார்..!

எதிரே மந்தாகினியில் குளித்து விட்டு, இரண்டு இளைஞர்கள் கரை ஏறி தாசரிடம் வந்தனர்..! வந்தவர்களில் ஒருவன் நல்ல கருப்பு நிறம், மற்றவன் தங்க நிறம் முகத்தில் பத்துப் பதினைந்து நாள் வளர்ந்த தாடி..

சுவாமி, கோபி சந்தனம் உள்ளதா? என்று அவர்கள் கேட்டனர்.

இருக்கிறது. தருகிறேன் என்றார் தாசர்..!

சந்தனம் கேட்ட இளைஞர்கள், சுவாமி, எங்களிடம் கண்ணாடி இல்லை. நீங்களே எங்கள் நெற்றியில் இட்டு விடுங்கள் என்றனர்..!

(வட இந்தியாவில் கங்கை முதலிய நதிக்கரைகளில் பண்டாக்கள் (சாதுக்கள்) உட்கார்ந்து கொண்டு, நதியில் நீராடி வருபவர்களுக்கு நெற்றியில் திலகம் இட்டு, தட்சணை வாங்கிக்கொள்ளும் பழக்கம் இன்றும் உள்ளது)

அதற்கென்ன, இட்டு விடுகிறேனே என்றார் தாசர். இடது கையில் நீர் விட்டுக் கொண்டே கோடு சந்தனத்தைக் குழைக்கிறார்..!

அந்த கருப்பு இளைஞன் எதிரே உட்கார்ந்து, முகத்தை நீட்டுகிறான். தாசர் அவன் மோவாயைப் பிடித்துக் கொண்டு முகத்தைப் பார்க்கிறார்..! அவனது கண்கள் குருகுருவென்று இவரைப் பார்க்கின்றன. பார்த்தவுடன் தன்னை மறந்துவிட்டார்..! அந்த இளைஞன் இவருடைய கையில் இருந்த கோபி சந்தனத்தைத் தன் கட்டைவிரலில் எடுத்து தன் நெற்றியில் தீட்டிக் கொண்டு அவருடைய நெற்றியிலும் தீட்டினான்..!

தன்னுடன் வந்தவனுக்கும் தீட்டினான். அவர்கள் உட்கார்ந்திருந்த படித்துறைக்கு அருகில் ஒரு மாமரம், மரத்தின் மீது இருந்த கிளி கூவியது..!

**"சித்ரக் கூடகே காடபரே பகி**

**ஸந்தக கீ பீர..**

**துளசிதாஸமே சந்தந கிஸே..**

**திலக தேத ரகுபீர...!"**

**பொருள் :** சித்ரக் கூடத்துக் கரையில் சாதுக்கள் கூட்டம். துளசிதாசர் சந்தனம் குழைக்கிறார். ராமன் திலகமிடுகிறார்.

இதைக் கேட்ட துளசிதாசர் திடுக்கிட்டு சுய நினைவிற்கு வந்தார்..!

சாது அவர்களே! என் நெற்றியில் நாமம் சரியாக இருக்கிறதா? என்று கேட்டான் அந்தக் கருப்பு இளைஞன்..!

ராமா, உனக்கு இதைவிட பொருத்தமான நாமம் ஏது? என்று கதறிக்கொண்டே.. அந்த இரண்டு இளைஞர்களையும் கட்டி அணைத்துக் கொண்டார் துளசிதாசர்..! மறுகணம் ராம, இலட்சுமணரைக் காணவில்லை...!!

"கடவுள் தன்னை முழுவதுமாகச் சரணடைந்த உண்மையான பக்தர்களுக்குக் கலியுகத்திலும் எந்த ரூபத்திலும் காட்சி தருவார்... இது சத்தியம் என்பதை நிரூபிக்கிறது துளசிதாசரின் சரிதம்..!!

# ஆடி மாத வரலாறு

'ஆடி' என்பது ஒரு தேவமங்கையின் பெயர் என்கிறது புராணம். ஒரு சமயம் பார்வதி தேவி, ஈசனைப் பிரிந்து தவம் செய்யும் நிலை ஏற்பட்டது. சிவபெருமான் தனிமையில் இருப்பதை அறிந்த 'ஆடி' என்னும் தேவகுல மங்கை, பாம்பு உருவம் எடுத்து, கயிலையின் உள்ளே யாரும் அறியா வண்ணம் நுழைந்தாள்.

பிறகு பார்வதி தேவியாக உருமாறி, சிவபெருமான் அருகில் சென்றாள். அப்போது ஒரு கசப்பான சுவையை சிவபெருமான் உணர்ந்தார். தன்னை நோக்கி வந்தவள் பார்வதி அல்ல என்பதை அறிந்த சிவபெருமான், கோபம் கொண்டு, தன் சூலாயுதத்தால் ஆடியை அழிக்க முயன்றார். அப்போது சூலாயுதத்திலிருந்து வெளிப்பட்ட தீப்பொறி 'ஆடி'யைப் புனிதமடையச் செய்தது.

'ஆடி' ஈசனை வணங்கி, ஒரு நிமிடமாவது தங்கள் அன்பான பார்வை என்மீது பட வேண்டும் என்ற ஆசையிலேயே இவ்வாறு நடந்து கொண்டேன். என்னை மன்னித்தருள வேண்டும் என்று வேண்டினாள். ஆனால், சிவபெருமான் என் தேவி இல்லாத சமயம் நீ அவளைப்போல வடிவம் கொண்டு வந்தது தவறு. எனவே, பூவுலகில் கசப்புச் சுவையுடைய மரமாகப் பிறப்பாய் என்றார்.

அவள் விமோசனம் கேட்க, "கவலை வேண்டாம், நீ மரமாகிப் போனாலும் ஆதிசக்தியின் அருளும் உனக்குக் கிட்டும். சக்தியை வழிபடுவதுபோல், உன்னையும் வழிபடுவார்கள். 'ஆடி'யாகிய உன் பெயரிலேயே ஒரு மாதம் பூலோகத்தில் அழைக்கப்படும். அந்த வேளையில் நீ கசப்பு குணம் கொண்ட மரமாக இருந்து மக்களுக்கு நல்லதைச் செய்வாய்" என்று அருளினார்.

'ஆடி' என்ற தேவலோகத்துப் பெண்தான் பூலோகத்தில் வேப்ப மரமாகத் திகழ்கிறாள். ஈசனின் சாபமே அவளுக்கு வரமாக மாறியது. தெய்வம்சம் பொருந்திய வேம்பு, ஆதிசக்தியின் அம்சமாக உள்ளது. நோய்கள் பலவற்றை குணமாக்கும் சக்தி கொண்டவளாகத் திகழ்ந்தாள் அந்த மங்கை. எனவேதான் ஆடி மாதம் அம்மனுக்கு மிகவும் சிறப்பு வாய்ந்த மாதமாகக் கருதப்படுகின்றது.

ஆடியில், செவ்வாய்க்கிழமை தோறும், சுமங்கலிப் பெண்கள் மஞ்சள் பூசிக் குளிப்பதால், மாங்கல்ய பலம் கூடும். அதேபோன்று ஆடி மாதச் செவ்வாய்



கிழமைகளில், பெண்கள் ஔவையார் விரதம் கடைப்பிடிக்கும் வழக்கமும் உண்டு. கணவனின் ஆயுள் நீட்டிக்கவும், குழந்தை வரம் வேண்டியும், குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கவும், கன்னிப் பெண்களுக்கு விரைவில் திருமண வரம் கிடைக்கவும் இந்த விரத வழிபாட்டின் மூலம் பிரார்த்தித்துக் கொள்வார்கள்.

ஆடி மாதம், துளசி வழிபாடு அரிதான பல பலன்களைத் தரும். ஆடி மாதம் வளர்பிறை நாட்களில் துளசியை வழிபட்டு வந்தால், ஐஸ்வர்யம் பெருகும். நீண்ட ஆயுள் கிடைக்கும்.



# விபூதியை எப்படி பெற வேண்டும்?

இறைவழிபாட்டில் மிக முக்கியமான இடத்தைப் பிடிப்பது திருநீறு. எந்தக் கோயிலுக்கு சென்றாலும் திருநீறு நெற்றியில் இடுவதற்கு கொடுக்கப்படுகிறது. நம் நெற்றியில் வைக்கப்படும் திருநீறு, சூரிய கதிர்களின் சக்தி அலைகளை ஈர்த்து, நம் நெற்றி வழியாக கடத்தும் தன்மையுடையது.

திருநீறு மருத்துவக் குணமுடையது. ஆதலால், திருநீறை நீரில் குழைத்து, நெற்றியில் பூசினால், கபாலத்தில் உள்ள நீர் வற்றி, பல வியாதிகள் தீரும் என்று கருதப்படுகிறது. திருநீறுக்கு இரட்சை, சாரம், விபூதி, பஸ்மம், பசிதம் என்று பல பெயர்கள் உள்ளது. பசுவானது மகாலட்சுமியின் அம்சமாக விளங்குகிறது. பசுவின் சாணத்தை அக்னியில் இட்டு, பஸ்பமாக்கி திருநீறு தயாரிக்கப்படுகிறது.

இவ்வாறு பெறப்படும் திருநீறு உடலை சுத்தப்படுத்தி, அதற்குள் உள்ள ஆத்மாவைப் பரிசுத்தமாக்கும் திறன் பெற்றது. திருநீறை பெறும் போது நாம் கவனிக்க வேண்டியவை.. கோயிலில் விபூதிப் பிரசாதம் வாங்கும் போது ஒற்றை கையை மட்டும் நீட்டி வாங்கக் கூடாது. வலக்கையின் கீழே இடக்கையைச் சேர்த்து வைத்துதான் விபூதியை வாங்க வேண்டும். விபூதியை வாங்கும் போது "திருச்சிற்றம்பலம்" என்றும், விபூதியை நெற்றியில் இடும் போது "பஞ்சாட்சர" மந்திரத்தையும் ஜபிக்க வேண்டும்.

விபூதியை இடக்கையில் கொட்டி, அதிலிருந்து எடுத்து நெற்றியில் இடக்கூடாது. வலக்கையில் உள்ள விபூதியை அப்படியே நெற்றியில் இட வேண்டும். அவ்விதம் செய்ய இயலாவிட்டால், ஒரு சிறுதாளில் விபூதியை இட்டு, அதிலிருந்து எடுத்து நெற்றியில் வைக்கலாம்.

வயதில் நம்மைவிட இளையவர் கைகளிலிருந்து விபூதியை எடுத்து வைக்கக்கூடாது. விபூதியை நம் கையில் இடச் செய்து, அதிலிருந்து தான் எடுத்து நம் நெற்றியில் இட வேண்டும். குங்குமத்தை இளையவர் கைகளிலிருந்து எடுத்து நெற்றியில் வைக்கலாம்.

நடந்து கொண்டோ, படுத்துக் கொண்டோ விபூதியை வைக்கக்கூடாது. ஆச்சாரியார், சிவனடியார் இவர்களிடம் விபூதியை பெறும்போது அவர்களை வணங்கி விட்டு பெற வேண்டும். வடக்கு அல்லது கிழக்கு முகமாக நின்று தான் திருநீறு இட வேண்டும்.



# முருகப்பெருமான் ஓம்கார வடிவானவன்


திருப்பரங்குன்றம்


திருச்செந்தூர்


பழனி


சுவாமிமலை


பழமுதிர்சோலை


திருத்தணி

சங்ககாலப் புலவர் பெருமான், முருகனை பற்றி 'திருமுருகாற்றுப்படை' என்னும் துதி நூலை பாடியிருக்கின்றார். அதன் மூலம் ஆறு திருத்தலங்கள், முருகனின் அறுபடை வீடுகள் என்ற சிறப்பைப் பெற்றுள்ளன. அதன் விவரம் வருமாறு:-

1.திருப்பரங்குன்றம் - சூரபத்மனை போரில் வென்றபின், இந்திரன் மகள் தெய்வானையை மணந்த திருத்தலமிது. 2. திருச்செந்தூர் - அசுரன் சூரபத்மனோடு முருகன் போரிட்டு வென்று, வெற்றி வாகைச்சூடிய திருத்தலமிது. 3. பழனி - மாங்கனிக்காக தமையன் விநாயகரோடு போட்டியிட்டு, தோற்ற கோபத்தில் தண்டாயுத பாணியாக நின்ற திருத்தலமிது. 4. சுவாமிமலை - தன் தந்தை சிவனுக்கே பிரணவ மந்திரத்தை ஓதி, தகப்பன் சுவாமியாகக் காட்சி தரும் திருத்தலமிது. 5. திருத்தணி - சூரனை வதம் செய்த பின், சினம் தணிந்து குறவர் மகள் வள்ளியை மணந்த திருத்தலமிது. 6.பழமுதிர் சோலை - அவ்வைக்குப் பழம் உதிர்த்து, வள்ளி, தெய்வானையோடு காட்சி தரும் திருத்தலமிது.

முருகன் தமிழ்க்கடவுள் என்றும் அழைக்கப்படுகிறார். சரவணன், கார்த்திகேயன், குமரன், கந்தன், வடிவேலவன், சுப்பிரமணியன், சுவாமிநாதன், செந்தில்நாதன், ஆறுமுகன், சண்முகன் போன்ற பல பெயர்களால் அவர் அழைக்கப்படுகிறார். புராணங்கள் இவரை சிவனின் மகனாக சித்தரிக்கின்றன. புராணங்களின்படி



சிவனிடமிருந்து புறப்பட்ட தீப்பொறி, சரவண பொய்கையில் ஆறு பகுதிகளாக விழுந்தது. இது ஆறு குழந்தைகளாக உருப்பெற்றது. கார்த்திகைப் பெண்கள் 6 பேர், இந்த ஆறு குழந்தைகளை வளர்த்தனர். பின்னர் ஒரு கார்த்திகைத் திருநாளில் பார்வதி இந்த ஆறு குழந்தைகளையும் இணைத்தார். ஆறுமுகங்களைப் பெற்ற இவர் ‘ஆறுமுகன்’ என்று அழைக்கப்படுகிறார். கார்த்திகை மாத கார்த்திகைத் திருநாள் இவர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

‘ஓம்’ என்னும் பிரணவப் பொருளை சிவப்பெருமானுக்கு மட்டுமின்றி, உலகுக்கே முருகப் பெருமான் உணர்த்தியதாக வரலாறு உண்டு. ‘ஓம்’ என்பது, அ.உ.ம. என்ற மூன்றெழுத்தின் சேர்க்கையால் உண்டானது. அ-படைத்தல், உ-காத்தல், ம-ஒடுக்கல் என முறையே பொருள்படும். அ.உ.ம. என்னும் மூன்றும் இணைந்து உண்டான ‘ஓம்’ எல்லா எழுத்துகளுக்கும், எல்லா ஓசைகளுக்கும், எல்லா நூல்களுக்கும் மூலமாக உள்ளது. ‘முருகு’ என்ற மூன்றெழுத்துகளிலும் அ.உ.ம. மூலமாக உள்ளதால் முருகன் ஓம்கார வடிவானவன். முருகப்பெருமான் அகத்தியருக்குத் தமிழ் கற்றுக் கொடுத்ததாகவும், மதுரை தமிழ்ச் சங்கத்தின் தலைமைப் புலவராகவும் வீற்றிருந்து தமிழ் வளர்த்ததாகவும் கூறப்படுகிறது.

தெய்வயானை கிரியா சக்தியாகவும், வள்ளி இச்சா சக்தியாகவும், வேல் ஞான சக்தியாகவும், மயில் ஆணவம் என்றும், சேவல் சிவஞானம் என்றும் கூறுவார்கள். முருகன் திருப்பெயர்கள் எண்ணிலடங்காது. ஆறுமுகப் பெருமானின் அவதாரங்கள் ஒவ்வொன்றும் சிறப்புடையது. அத்தகைய சிறப்புடைய முருகனை ஆடி கிருத்திகையில் வழிபட்டால் எல்லா வளமும் கிடைக்கும்.

# கிருஷ்ண துலாபாரம்

கிருஷ்ணர் முதலில் ருக்மணியைத் திருமணம் செய்தார். பின்னர் சத்திய பாமாவை மணந்து கொண்டார். ஒரு முறை கிருஷ்ணரிடம் யாருக்கு அன்பு அதிகம் என்பதை, சோதித்துப் பார்க்க ருக்மணியும், சத்திய பாமாவும் விரும்பினர். தங்களுடைய விருப்பத்தை கிருஷ்ணரிடம் தெரிவித்தனர். கிருஷ்ணரும் அதற்குச் சம்மதித்தார். அங்கே ஒரு துலாபாரம் (தராசு) கொண்டு வரப்பட்டது. கிருஷ்ணர் அதில் அமர்ந்து, ஏதும் அறியாதவர் போல் நடப்பதை அமைதியாகப் பார்த்துக்கொண்டு இருந்தார். முதலில் சத்திய பாமா தன்னிடம் இருந்த நகைகள் மொத்தத்தையும் ஒரு தட்டில் வைத்தாள். ஆனால், கண்ணன் அமர்ந்திருந்த தட்டில் அசைவே இல்லை.



தனது முயற்சியில் சற்றும் தளராது சத்தியபாமா, மேலும் தனது கழுத்தில், காதில், உடலில் அணிந்திருந்த எல்லா நகைகளையும் எடுத்து தராசில் வைத்தாள். அப்போதும் நகைகள் வைக்கப்பட்ட தட்டு கீழே வரவில்லை. சத்தியபாமா வெட்கத்தால் தலை குனிந்தாள். அடுத்து ருக்மணி, தராசின் அருகில் வந்து கிருஷ்ணரைப் பிரார்த்தித்து ஒரு துளசி இலையில், கிருஷ்ணரின் நாமத்தை எழுதி, தராசின் நகைகள் இருந்த தட்டில் வைத்தாள். என்ன ஆச்சரியம்! அது கிருஷ்ணனுடைய எடைக்குச் சமமாக நின்றது. இறைவனுக்கும், அவனது திருநாமத்துக்கும் எவ்வித வேறுபாடும் கிடையாது. பக்தியுடன் அவன் நாமத்தைச் சொல்லி, ஒரு துளசி இலையைச் சமர்ப்பித்தாலும் பகவான் கிருஷ்ணன் அதை ஏற்றுக்கொள்வார்.

பாகம்-22

# அறிவோம் ஆன்மீகம்

ஆன்மீகம் என்றால் என்ன? என்கிற புரிதல் இன்று, தனக்கு என்ன கிடைக்கும்? என்று சிந்திக்கும் அளவுக்கு அறிவும், சிந்தனையும் சுருங்கி விட்டது. மதவாதிகளும், அரசியல்வாதிகளும் பொருளை முதன்மைப்படுத்தி, அதனை அடைய யாரையும் கொலை செய்தேனும் பணத்தைச் சேர்ப்பதையே ஆன்மீகம் எனக் கருதுவதால் இலஞ்சம், ஊழல், திருட்டு, கள், காமம், கொலை எனப் பஞ்சமா பாவங்களைச் செய்தும் 'காசேதான் கடவுள்' என்கிற புதிய சிந்தனையில் உலக இயக்கம் திரும்பி விட்டது.

எனவே, ஆன்மீகம் புதிய கோணத்தில் பார்க்கப்படுவதும், புரிந்து கொள்ளப்படுவதும் காலத்தின் கட்டாயம் ஆகிறது. வரலாற்றைத் திரும்பிப் பார்ப்போம் என்றால், உரோமானிய அரசு பெரும் போர்களை நடத்த, பண பலமாக செயற்பட்டது கத்தோலிக்கத் திருச்சபையான வத்திக்கானும், பாப்பரசரும் என்பது மறுக்க முடியாத உண்மைகள். அதனால் முதல் முறையாக அரசு போராட கத்தோலிக்க மத பீடம் போராளிகளையும், பணத்தையும் வழங்கி, அந்தப் படையெடுப்புகளைச் 'சிலுவைப் போர்' எனப் பிரகடனப்படுத்தி, இன்றுவரை உலக கத்தோலிக்க நாடுகள் குறிப்பாக அமெரிக்காவும், வத்திக்கானும், ஐரோப்பிய நாடுகளும் உலகில் போர்களை நடத்தி வருகின்றன.

ஆனால், அதே கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவரான பாப்பரசர், எல்லா நாட்களிலும் உலக அமைதிக்காகவும், மக்களுக்காகவும் வத்திக்கானில் தமது ஆண்டவரிடம் பிரார்தனை செய்தும், வெளியில் திரண்டு நிற்கும் மக்கள் கூட்டத்தை ஆசீர்வதிக்கவும் தவறுவதில்லை. இதே பாப்பரசரின் தலைமையில செயற்படும் திருச்சபை ஆயுதம் மற்றும் போர்த் தளபாடங்களை உற்பத்தி செய்யவும், போர்களை உலகில் நடத்தவும் தனது பணத்தை முதலீடு செய்வதை வெகு சிலரே அறிவர்..

அதனால் ஐரோப்பிய நாடுகளில் விழிப்புணர்வு பெற்ற மக்கள், தமது கத்தோலிக்க மதத்தைப் புறக்கணித்தும், கடவுள் நம்பிக்கை இழந்தும் மாறி விட்டார்கள். அதனால் யேர்மனி போன்ற







நாடுகளில் சர்ச்சுகள், தேவாலயங்கள் புலம்பெயர் தமிழர்களின் வழிபாட்டுத் தலங்களாகவும், தொழிற்கூடங்களாவும் மாறிவிட்டன. பாட சாலைகளில் மதங்கள் போதிக்கப் படாமலும், மதச் சின்னங்களை இடம் பெறத் தடைகள் விதித்தும் ஆன்மீகம் தேடுவார் அற்றுப் போய் விட்டது.

மத்திய கிழக்கு நாடுகளில் ஈரான், ஈராக், இஸ்ரவேல், பலஸ்தீன நாடுகளும் மதங்கள் வழியில் உலகில் போர்களை நடத்தி மக்களையும், மக்கள் சொத்துகள், உயிர்களையும் அழிக்கும் கொடுமையைத் தமது மதக் கடமையாக 'ஜிகாத்' என்றும், சிலுவைப் போர் என்றும், ஜனநாயகம் என்றும், பயங்கர வாத ஒழிப்பு என்றும் போர்களைப் புனிதப்படுத்தி, உலக மக்களின் மனதில் ஆன்மீக வழியில் போர்களை தர்ம கைங்கரியமாக மக்களை நம்ப வைக்கும் பணியைச் செய்கின்றன. அதனால் அப்பகுதிகள் எந்த நாளும் சண்டைகளும், இரத்தக் களரியுமாகத் திகழ்கின்றன.

ஆசிய நாடுகளான பாக்கிஸ்தான், இந்தியா, இலங்கை, வங்கதேசம், பர்மா போன்ற நாடுகளில் மதப் பூசல்களும், சண்டைகளும், வன்செயல்களும், மனிதப் படுகொலைகளும், ஆன்மீகம் என்ற பெயரால் மக்களின் மன அமைதிக்கும், உயிர், உடைமைகள் சேதம், நில ஆக்கிரமிப்பு, கலாசார இன அழிப்புகள் என்பன மிகப் பெரிய அளவில் அன்றாடம் நடக்கின்றன. இதில் இலங்கையின் சிங்கள ஆட்சியாளர்களும், அரச படைகளும், புத்தபிக்குகளும் தமிழர்களை 'நாட்டை விட்டுப் போய்விடுங்கள்' எனப் பூர்வீக முழு இலங்கையும் சிங்களவருக்கே சொந்தம் என தமிழ் மக்களைப் பகிரங்கமாக விரட்ட முனைவதைக் காண்கிறோம்.

பர்மாவில் நடக்கும் இராணுவ ஆட்சி போலவே, இலங்கையில் தமிழர்கள் இராணுவக் கெடுபிடி ஆட்சி, மதத்தின் பெயரால் நடக்கிறது. 1970களில் இந்தியாவில் 'இராம ஜன்ம பூமி மீட்பு' எனத் தொடங்கிய மத வெறி, இன்று தென் கிழக்காசியப் பிராந்தியம் எல்லாம் பரவி நிற்கிறது.

உலகில் திருப்பதி போன்ற கோயில் உண்டியல்களில் தினமும் சேரும் கோடானுக் கோடி பணம், தங்கம், வைரம் போன்ற பெறுமதி மிக்க செல்வக் குவியல் எங்கே? யாரால்? என்ன பயன்பாட்டுக்காக செலவளிக்கப்படுகின்றன? என்பது யாருக்குத் தெரியும்?. கடவுளின் பெயரால் பெறப்படும் இப்பெரிய செல்வக் குவியல், வைகுண்டத்துக்கும், சிவலோகத்துக்கும், பரமண்டலத்தில் உள்ள பரம பிதாவுக்கும், பிற முப்பத்து முக்கோடி தேவர்களுக்குமா அனுப்பி வைக்கப்படுகின்றன?

எமது ஈழப் போராட்டத்திலும், நாம் கோயில் உண்டியல்களில் போட்ட பணம், எம் இனத்தின் அழிவுப் போரில், தமிழ் இன அழிப்புக்கு உதவியது என்பது யாருக்குத் தெரியும்?

அடுத்த இதழில்...
**ஈழத் தமிழ் இன அழிப்பில் ஆன்மீகம்**



மஞ்சளும், குங்குமமும் மகத்துவம் நிறைந்தது என்று, நமது இந்து மத சாஸ்திரங்களில் எழுதி வைக்கப்பட்டுள்ளன. பொதுவாகவே எல்லா சுபகாரியங்களிலும் மஞ்சளும், குங்குமமும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இந்த இரண்டும் இல்லாமல் எந்த மங்கள செய்கைகளும், மகத்துவம் பெற முடியாது. கோவிலாக இருந்தாலும், வீடாக இருந்தாலும் சரி அவசியம் வழிபாடுகளில் மஞ்சள், குங்குமம் இடம் பெற்றிருக்கும். குறிப்பாக அம்பாள் வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஆலயங்களில் குங்குமம், முதல்இடம் பெற்றிருக்கும். அந்த அளவுக்கு குங்குமம் முக்கியமானது.

திருமணம், வீடு கிரகப் பிரவேசம் உள்ளிட்ட சடங்குகளில் நாம் உன்னிப்பாகக் கவனித்தால் முதலில் மஞ்சளில் பிள்ளையார் பிடித்து, அதில் குங்குமமிட்ட பிறகுதான் மற்ற செயல்கள் தொடங்குவதை நீங்கள் அறிந்து இருப்பீர்கள். அது போலத்தான் ஒரு பெண்ணை மங்களகரமாக தோன்ற செய்வதும் மஞ்சள்-குங்குமம்தான். ஒரு பெண் தன் நெற்றில் குங்குமம் வைத்துக் கொண்ட பிறகு பாருங்கள், அந்தப் பெண்ணுக்கும் குங்குமத்துக்கும் தனி மரியாதை உண்டு.

பெண்கள் தங்கள் திருமாங்கல்யத்தில் குங்குமம் வைத்து கண்ணில் ஒற்றிக் கொள்வதுண்டு. இதுதான் சுமங்கலிக்கு ஆதாரமாகக் கருதப்படுகிறது. இதனால்தான் அம்பாள் தலங்களில் வழங்கப்படும் குங்குமத்தைப் பெண்கள் மிகப்பெரும் பாக்கியமாகக் கருதிப் பெற்றுக் கொள்வதுண்டு. குங்குமம் உங்கள் திருக்கரங்களில் பட்டதுமே நீங்கள் மெய்சிலிர்த்துப் போவீர்கள். அந்தக் குங்குமத்துக்கு அவ்வளவு சக்தி உண்டு. அத்தகைய குங்குமம் உங்கள் பரந்த நெற்றியை அலங்கரிக்கும் போது, மகத்துவம் அதிகரித்து விடும். உங்களை எந்தப் பார்வையும், திருஷ்டியும், ஏவலும் அண்டவே அண்டாது. இது நிஜம்.

# மகத்துவம் நிறைந்த குங்குமம்



# அவதரித்தாள் ஆண்டாள்!



ஆடிப்பூர நன்னாளில் அவதரித்தாள் ஆண்டாள். பக்தியால், இறைவனை அடையலாம் என்பதை எடுத்துக்காட்ட, பொறுமையின் சின்னமான பூமாதேவி, ஆண்டாளாக இந்தப் பூமியில் அவதரித்து, வாழ்ந்து காட்டினாள். ஸ்ரீவில்லிபுத்தூரில் முகுந்தபட்டர், பத்மவல்லி தம்பதியர் வசித்து வந்தனர். இவர்கள் தங்கள் ஊரிலுள்ள வடபத்ரசாயி (ஆண்டாள்) கோவிலில் வேலை செய்து வந்தனர். இவர்களுக்குக் கருடாழ்வாரின் அம்சமாக, ஐந்தாவதாக ஒரு ஆண் குழந்தைப் பிறந்தது. குழந்தைக்கு, 'விஷ்ணு சித்தர்' என்று பெயரிட்டனர். இவரும் பெருமாள் மீது தீராத பக்தி கொண்டிருந்தார்.

பெருமாளின் துணைவியான பூமாதேவி, இவருக்கு வளர்ப்பு மகளாக ஐந்து வயது குழந்தையாகத் துளசித்தோட்டம் ஒன்றில் அவதரித்தாள். அவளுக்கு, 'கோதை' என்று பெயர் சூட்டப்பட்டது. ஸ்ரீவில்லிபுத்தூர் கோவில் மூலவரான வடபத்ரசாயிக்கு, விஷ்ணு சித்தர் தினமும் மாலை கட்டிச் சூட்டுவார். அந்தப் பெருமாள் மீது ஆண்டாள் காதல் கொண்டாள். தன்னை அவரது மனைவியாகவே கருதி, அவருக்குச் சூட்டும் மாலையை தன் கழுத்தில் போட்டு, அழகு பார்த்து, அனுப்பி விடுவாள். இதையறியாத விஷ்ணு சித்தர், பெருமாளுக்கு அதை அணிவித்து வந்தார்.



ஒருநாள், கூந்தல் முடி ஒன்று மாலையில் இருக்கவே, அதிர்ந்து போன ஆழ்வார், அது எவ்வாறு வந்தது? என நோட்டமிட ஆரம்பித்தார். தன் மகளே அதைச்சூட்டி அனுப்புகிறாள் என்பதை அறிந்து, மகளைக் கடிந்து கொண்டார். மறுநாள் மாலையைக் கொண்டு சென்ற போது, அதை ஏற்க பெருமாள் மறுத்து விட்டார். 'கோதைச் சூடியதையே நான் சூடுவேன். மலரால் மட்டுமல்ல, மனதாலும் என்னை ஆண்டாள் உம் பெண்...' என்று குரல் எழுந்தது. அன்று முதல் கோதைக்கு,'ஆண்டாள்' எனும் திருநாமம் ஏற்பட்டது. பின்னர், பெருமாளுடன் அவள் கலந்தாள்.

ஆண்டுகள் பல கடந்தும், நம் சமூகத்தின் வழிபாடு முறைகளில் முக்கியமாக இருக்கும் ஒரு சடங்கு, கோவில்களில் தேங்காய் உடைப்பதாகும். எந்த ஒரு நல்ல காரியம் செய்வதற்கு முன்னரும், கோவில்களில் தேங்காய் உடைப்பது இன்றும் வழக்கமாக உள்ளது. அதிலும் குறிப்பாக முதலில் முதன்மைக் கடவுளான பிள்ளையாருக்குத் தேங்காய் உடைக்கப்படுகிறது. கோவில்கள் எப்படி பல நூற்றாண்டுகள் கடந்து இன்றும் அழியாமல் இருக்கின்றதோ, அதே போல் கோவில்களில் பின்பற்றப்படும் வழிபாடுகளும் அழியாமல்தான் இருக்கின்றன. அவ்வாறு வேதங்களில் சொல்லப்படுவது என்னவென்றால், பெண்கள் சிதறு தேங்காய் உடைப்பது என்பது அவர்களுக்குத் துன்பத்தை அளிக்கக்கூடிய செயலாகும். இதற்கான காரணம் என்னவென்று தெரிந்து கொள்வோம்.

இலங்கையில் தேங்காய் இல்லாத சடங்குகளே கிடையாது. சுபகாரியங்கள் என்றாலும் சரி, துக்க காரியங்கள் என்றாலும் சரி, அதில் தேங்காய் இல்லாமல் இருக்காது. அதேபோல் கோவில்களில் கடவுளுக்குப் படைக்கப்படும் முக்கியமான பொருளாக தேங்காய் இருக்கிறது. கடவுளுக்குப் படைக்கப்பட்டத் தேங்காய், பக்தர்களுக்குப் பிரசாதமாகக் கொடுக்கப்படுகிறது.

இயற்கையின் படைபில் அற்புதம், அதிசயம் என்று தேங்காயைச் சொல்லலாம். தேங்காயில் இருக்கும் நீரும், அதன் உள்ளிருக்கும் சதைப் பற்றுள்ள பகுதியும்

# சிதறு தேங்காய்

## பெண்கள் சிதறு தேங்காய் உடைக்கலாமா?



இன்றளவும் மனிதனால் மாசடையாமல், தூசிப்படாமல், தூய்மையாக இருப்பதனால்தான் கடவுளுக்குப் படைக்கப்படுகிறது.

விநாயகருக்கு மிகவும் பிடித்த பொருள் தேங்காய். ஏனென்றால் விநாயகர் ஒரு பிறவியில் முனிவராக அவதாரம் எடுத்திருந்தார். அவர் யாகத்திற்குச் செல்லும்பொழுது, அசுரன் ஒருவன் விநாயகரை வழி மறித்ததால், அவர் யாகத்திற்குக் கொண்டுசெல்லும் தேங்காயை எடுத்து, அசுரனை அடித்து விரட்டினார். எனவேதான் ஏதேனும் வண்டி, வாகனங்கள் வாங்கும்பொழுதும், புதிய வீடு குடியேறும் பொழுதும் இது போன்ற எந்த ஒரு செயலை துவங்குவதற்கு முன்பும் தேங்காய் உடைத்து, நமக்கு வரப்போகும் தடைகளைத் தவிர்க்கக் கூறி விநாயகரைத் தொழுகிறோம்.

தேங்காய் உடைப்பதற்கு மற்றுமொரு காரணமும் உண்டு. தேங்காய் மனித உடலின் பிரதிபலிப்பாகும். நமது கர்வத்தை அழித்து, ஆன்மாவைச் சுத்தப்படுத்தும் அடிப்படையில்தான் தேங்காயைக் கடவுளின் முன் உடைக்கின்றோம். தேங்காய் உடைப்பதில் இத்தனை சிறப்புகள் இருந்தாலும், ஒருபோதும் பெண்கள் தேங்காயை உடைக்கக்கூடாது.

பெண்கள் சிதறு தேங்காய் உடைக்கக் கூடாதென்று சாஸ்த்திரங்கள் கூறுகின்றன. பெண்கள் வீட்டின் லட்சுமியாகக் கருதப்படுகிறார்கள். எனவே, அவர்கள் இதனைச் செய்வதால், அது லட்சுமி தேவிக்குக் கோபத்தையே உண்டாக்கும். ஏனென்றால் சிதறு தேங்காய் உடைப்பதும், ஒரு விதத்தில் பலி கொடுப்பதற்குச் சமமாகும். எனவே, அவ்வாறான பலி கொடுக்கும் செயலினை பெண்கள் செய்தல் கூடாது.

தேங்காய் என்பது ஒரு வித விதையாகும். இதனை அழிப்பது, உடைப்பது போன்ற செயல்கள் பெண்கள் செய்தால், அது ஒருவகையான



பாவச்செயலாகும். அவர்களுக்குத் தீராதத் துன்பம் ஏற்படும். கர்ப்பிணி பெண்கள் இந்த செயலில் ஈடுபடுவது என்பது நிச்சயம் கூடாது. கர்ப்பிணி பெண்களின் வயிற்றில் வளரும் குழந்தையும் ஒரு விதை போன்றுதான். எனவே, பெண்கள் அவர்கள் கையினால் ஒரு விதையைச் சிதற உடைப்பது என்பது நல்லதல்ல.

தேங்காய் என்பதற்கு சமஸ்கிருதத்தில் 'நரிக்கெலா' என்றும், 'புனித பழம்' என்று பொருள் படும்படியாக 'ஸ்ரீபழா' என்றும் அழைக்கப்படுகிறது. அல்லது கடவுளுக்கு அர்ப்பணிக்க உகந்த பழம் என்ற அர்த்தத்தில் 'மகா பழம்' என்றும் அழைக்கப்படுகிறது.

வேதப் புராணத்தில் இது குறித்த குறிப்புகள் பெருவாரியாக இல்லாவிடினும், காப்பியம் மற்றும் புராணங்களில் உண்டு. இந்தப் பழம் முதன்முதலில் இந்தோனேஷியாவில் விளைவிக்கப்பட்டு, முதலாம் நூற்றாண்டில் கொண்டு வரப்பட்டது. தேங்காயிற்கு மருத்துவக் குணங்களும் அதிகம், ஆன்மீகக் குணங்களும் அதிகம் என்ற வகையில் அது நம் இந்துக்களின் மரபில் தவிர்க்க முடியாத இடத்தை பெற்றுள்ளது.

நம்பிக்கை என்பது நம் மனதைப் பொறுத்தது. இதில் இருக்கும் உண்மையை உணர்ந்தவர்கள், இதனை ஏற்றுக் கொண்டு பயன் பெறுங்கள்.

# பிள்ளையார் சுழி



‘உ’ எனும் உகரம் பிள்ளையார் சுழியாய் எழுதப்படுகிறது. நாழியின் குறியீடாகவும் உள்ளது. இந்தப் பிள்ளையார் சுழி குறித்து பல்வேறு கருத்துகள் வழங்குகின்றன. முன்னோர்கள் ‘உ’ என்று முதலில் எழுதி, அடுத்து ‘சிவமயம்’ என்று எழுதுவார்கள். தற்போது இந்த வழக்கம் மறைந்து விட்டது. ஆனால், இன்றும் நாட்டுக்கோட்டைச் செட்டியார் சாதியினர் ‘உ’ ‘சிவமயம்’ என்று எழுதுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். வேறு சிலர் ‘உ’ என்று பிள்ளையார் சுழியை மட்டும் போட்டு, எழுதத் தொடங்கும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர். இந்த ‘உ’ குறியீட்டை சிலர் நாளை (தேதி)க் குறிக்கவும் பயன்படுத்துகின்றனர். இரண்டு என்கிற எண்ணுக்கும் இதே எழுத்து, குறியீடாகவும் அமைந்துள்ளது.


**கருத்து ஒன்று :** தமிழ் எழுத்துகள் இயற்கை வடிவமான வட்ட வடிவின என்றும், அவ்வட்டத்தை விரைந்தெழுதும் போது, அதன் முடிவு நீளக்கோட்டில் முடியுமென்றும் எழுதத் தொடங்குவான். முதலில் வட்டமிட்டுப் பின் அதைக் கோடாக இழுத்ததால் பிள்ளையார் சுழி ஏற்பட்டதென்பது ஒரு கருத்து.

**கருத்து இரண்டு :** ஏட்டில் எழுதும் போது, எழுதுகோலின் சீர்மையையும், ஏட்டின் செம்மையையும் அறியச் சுழித்துப் பார்க்கும் வழக்கமே பிள்ளையார் சுழியாகி விட்டது என்பது ஒரு கருத்து.

**கருத்து மூன்று :** பிள்ளையாரின் முகத் தோற்றம் ‘ஓ’ என்றும், ‘ஓம்’ என்றும் பிரணவத்தைச் சுருக்கமாக ‘உ’ என முன்னெழுதி ஏனையவற்றைப் பின் எழுதுவது, சுவடி எழுதுவோரின் மரபாக இருந்துள்ளது. ஒலி வடிவிலும், வரி வடிவிலும் ஐந்தன் கூட்டமாகிய பிரணவத்தின் அகரம் சிவம்; உகரம் சக்தி; மகரம் மலம்; நாதம் மாயை; விந்து உயிர் ஆகும். இவற்றுள் அகர உகர வடிவாக உள்ள பிள்ளையார் சுழி சிவசக்தியின் சேர்க்கை என்பது ஒரு கருத்து.

**கருத்து நான்கு :** திருமூலர் அகரம் உயிரென்றும், உகரம் இறையென்றும், மகரம் மலமென்றும் கூறுவதால், அகரமாகிய உயிர், உகாரமாகிய





இறைவனோடு இயைந்து ஒன்றியிருக்கும் நிலையை விளக்குவதே பிள்ளையார் சுழியாயிற்று என்கிறது ஒரு கருத்து.

**கருத்து ஐந்து :** திருமூலரே பின்னும் பிரணவத்தின் ஐந்து கூறுகளில் அகரத்திற்குப் பிரமனும், உகரத்திற்கு திருமாலும், மகரத்திற்கு உருத்திரனும், விந்துவிற்கு மகேசனும், நாதத்திற்கு சதாசிவனும் ஆதி தெய்வங்களாவர். எழுதத் தொடங்குவது என்பது இலக்கியப் படைப்பைக் குறிக்கும். அதற்கு முன் பிரமனை ஆதி தெய்வமாகக் கொண்ட அகரத்தின் கூறாகிய ஒற்றைக் கொம்புக் குறியையும், எழுதப் பெறும் இலக்கியம் நின்று நிலை பெற வேண்டுமென்று திருமாலை ஆதி தெய்வமாகக் கொண்ட உகரத்தின் கூறாகிய கோட்டுக்குறியையும் இணைத்து 'உ' எனப் பிள்ளையார் சுழியாக எழுதினர் என்றும், அச்சுழி மூல மனுவாகிய பிரணவத்தின் சிதைந்த வடிவு என்றும் குறிப்பிடுகின்றனர்.


**கருத்து ஆறு :** ஓலையை எழுத எடுத்ததும் அதன் பதத்தைப் பார்க்க ஒரு சுழியையும், கோட்டையும் இழுத்துப் பார்ப்பதுண்டு. இந்த முதல் சுழிதான் காலப்போக்கில் பிள்ளையார் சுழியென்று ஆகியிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது என்றாலும், இது நம் அறிவுப் பசிக்கு முழு உணவும் அளிக்கவில்லை. தமிழ் உயிர் எழுத்துகள் அனைத்தும் சுழியையே அடிப்படையாகக் கொண்டவை. எனவே தமிழ் எழுத்துகளை எழுத வேண்டுமாயின் சுழிக்கக் கற்றுக் கொள் என்று முன்னோர்கள் இந்த முறையை அமைத்ததாக கி.ஆ.பெ.விசுவநாதம் குறிக்கின்றார்.

**கருத்து ஏழு :** கடிதங்களில் 'க்ஷ' என்று எழுதும் பழக்கம் பிள்ளையார் சுழி என்று இன்று அழைக்கப்பட்டாலும், முற்காலத்தில் 'தலைக்கீற்று' என்றும், 'மேல்பதி' என்றும் அழைக்கப்பட்டதென்றும் இதன் உண்மை வடிவம் 'க்ஷ' என்று எழுதும் போது, 'ஷ' என்றாகியதென்றும் சங்கேத மொழியில் மேற்படி என்று பொருள் கொடுப்பதாகவும், கடிதத் தலைப்பில் பதிக்கப் பெற்ற 'மேல்பதி' மருவி 'மேற்படி' என்பதைக் குறிக்கும்.

செயலின் தொடக்கம், ஓலைச் சுவடிகளின் தொடக்கத்தில் 'அறிவோம் நன்றாகக் குரு வாழ்க குருவே' என்று எழுதப்பட்ட நிலை சமயச் சார்புற்று 'அரி ஓம் நன்றாக' என்று எழுதப்பட்ட காலத்தில் ஏட்டின் தொடக்கத்தில் பிள்ளையார் சுழி இடம் பெற்றதோடு மட்டுமின்றிப் பாட்டின் முடிவிலும் பாடல் எண்களை அடுத்தும் இடம் பெற்றுள்ளமை இங்குச் சுட்டத் தகுந்தது.

இவ்வாறு, பிள்ளையார் சுழி பாடல் தொடக்கத்தையும், பாடல் முடிவையும், எண் முடிவையும் குறித்து நின்ற குறியீடாகப் பயன்படுத்தப்பட்டமையும் புலனாகிறது. பிள்ளையார் வழிபாடு என்பதே தமிழகத்தில் பிற்காலத்தில் ஏற்பட்ட ஒன்று. அதற்கு முன்பிருந்தே ஏட்டில் எழுதும் வழக்கம் இருந்து வந்தமை கண்கூடு, ஏட்டின் சேர்பதம் பார்க்கச் சுழித்து பார்த்த நிலையைச் சமயப் பார்வை மிகுந்த பிற்காலத்தில் 'பிள்ளையார் சுழி' யாக்கி விட்டனர் எனபதே பொருந்துவதாகும். பிள்ளையார் சுழியின் பிறப்பு எவ்வாறு இருப்பினும் இன்று அது ஒரு செயலின் தொடக்கத்தைக் குறிப்பதாக மருவி வழங்கி வருகிறது.

ஆதாரம் : முனைவர் தமிழப்பன் எழுதிய தமிழ் இலக்கியத்தில் எண்ணும் எழுத்தும் (நூல்) பக்கம் 90 முதல் 94 வரை.



- பேராசிரியர் புஸ்பரட்ணம்

# காட்டுப் பகுதியில் அழிவடைந்து கொண்டிருக்கும் ஆயிரமாண்டு பழமையை பாதுகாப்போம்

**சென்ற இதழின் தொடர்ச்சி...**

இந்த ஆய்வின் போது கட்டிட அழிபாடுகளில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட ஐந்து தமிழ்க் கல்வெட்டுகள், இவ்வாலய வரலாற்றுடன் கிழக்கிலங்கை வரலாறு பற்றிய ஆய்விலும் அதிக முக்கியத்துவம் வாய்ததாகக் காணப்படுகின்றது. எமக்குத் தெரிந்தவரை வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள வரலாற்றுப் பழமை வாய்ந்த ஆலயங்களுடன் அவ்வாலயங்களின் வரலாறு கூறும் கல்வெட்டுகளும் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் அந்த இரண்டு அம்சங்களும் முதன் முறையாகத் திருமங்கலாயில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது.

இங்கு கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகளின் எழுத்தமைதியைக் கொண்டு, அவை வேறுபட்ட காலங்களில், வேறுபட்ட நோக்கங்களுக்காகப் பொறிக்கப்பட்டவை என்பதை உறுதிப்படுத்த முடிகின்றது. அவற்றுள் கி.பி. 10 ஆம், கி.பி. 11 ஆம் நூற்றாண்டுக்குரிய மூன்று கல்வெட்டுகள், ஆலய நிர்வாக ஒழுங்குகள் பற்றியும், அவ்வாலயத்திற்குச் சிற்றம்பலம் உடையார், திருவெண்ணைக்கூற்றன், திருவரங்கம் முதலான அதிகாரிகள், சமூகப் பெரியவர்கள் வழங்கிய தானங்கள் (காசு) பற்றியும் கூறுகின்றன. கி.பி. 15 ஆம் கி.பி. 16 ஆம் நூற்றாண்டுக்குரிய ஏனைய இரு கல்வெட்டுகளும் இவ்வாலயத்திற்குப் பசுக்கள் தானமாக வழங்கப்பட்ட செய்திகளைக் கூறுகின்றன.



இந்நிலையில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள, கங்குவேலி என்ற இடத்தில், திருமங்கலாய் ஆலயத்திற்குரிய மணி ஒன்று காணப்படுகின்றது. இது திருமங்கலாய் ஆலயத்தில் இருந்து பிற்காலத்தில் கங்குவேலிக்கு எடுத்துச் செல்லப்பட்ட மணியாகும். ஆவ்வாலய மணியில் திருமங்கலாய் கோவிலுக்கு அவ்வூரில் வசித்த (திருமங்கலாயில் வசித்த) “பத்திபெட்டி மகன் பத்தனுடைய உபயம்” என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இச்சாசனத்தின் எழுத்தமைதி கொண்டு, இதன் காலம் கி.பி.17 ஆம் நூற்றாண்டிற்கு உரியதெனக் கூறலாம். ஆகவே மேற்கூறப்பட்ட கல்வெட்டுகள், ஆலய மணிச் சாசனம் என்பவற்றை ஆதாரங்களாகக் கொண்டு இவ்வாலயம் இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து ஏறத்தாழ 17 ஆம் நூற்றாண்டுவரை அழிவடையாத நிலையில் இப்பிரதேச மக்களால் வழிபடப்பட்டு வந்துள்ளமை தெரியவருகின்றது.

இவ்வாலயம் இலங்கைத் தமிழர், குறிப்பாக கிழக்கிலங்கைத் தமிழரின் பூர்வீக வரலாறு, பண்பாடு பற்றிய ஆய்வில் பின்வரும் அம்சங்களில் முக்கியத்துவம் பெறுகின்றதை அவதானிக்க முடிகின்றது.



1. இவ்வாலயம் கி.பி. 10 ஆம் நூற்றாண்டிலிருந்து திராவிடக் கட்டிடக்கலை மரபில் தோன்றி வளர்ந்ததற்குப் பின்புலமாகத் திருமங்கலாய்ப் பிரதேசத்தின் தொன்மையான, செறிவான தமிழ்க் குடியிருப்புகள் இருந்துள்ளமை தெரிகின்றது. இந்த உண்மையை எமது ஆய்வின் போது இப்பிரதேசத்தில் ஆங்காங்கே பிற தேவைகளுக்காக வெட்டப்பட்டிருந்த ஆழமான குழிகளில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட 10 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட மட்பாண்ட ஓடுகள், கூரை ஓடுகள், சுடுமண் உருவங்கள் முதலான சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

2. தமிழகத்தில் பல்லவர் ஆட்சியில் தோன்றிய பக்தி இயக்கத்தின் செல்வாக்கால், சமகால இலங்கையிலும் கற்களைப் பயன்படுத்தித் திராவிடக் கலைமரபில் ஆலயங்கள் அமைக்கும் மரபு தோன்றி வளர்ந்ததைக் காணமுடிகின்றது. அவற்றுள் சோழ ஆட்சியின் தலைநகராக இருந்த பொலநறுவையில் கட்டடப்பட்ட இரண்டாம் சிவதேவாலயமே இலங்கையில் இதுவரை ஓரளவு முழுமையாகக் கண்டுபிடிக்கப்பட்ட காலத்தால் முந்திய திராவிடக் கலைமரபில் கட்டப்பட்ட ஆலயம் எனக் கூறப்படுகின்றது. ஆனால், பொலநறுவை இராசதானி கால வரலாற்றில் எந்த இடத்திலும் சொல்லப்படாத திருமங்கலாய் சிவன் ஆலயம் அதன் கட்டிட அமைப்பிலும், கலைமரபிலும் சற்று மேலோங்கிக் காணப்படுவதன் முக்கியத்துவம் எதிர்காலத்தில் விரிவாக ஆராயபட வேண்டும் என்பதைக் கோடிட்டுக் காட்டுவதாக உள்ளது.

3. சோழர் ஆட்சியிலும், சோழர் ஆட்சிக்குப் பின்னரும் பொலநறுவைக்கு அப்பால் வடக்கு - கிழக்கு இலங்கையிலேயே சோழ ஆட்சியாளர், தமிழ் அதிகாரிகள், தமிழ் வணிகக் கணங்கள் முதலியோரால் கட்டப்பட்ட ஆலயங்கள் பற்றிப் பல தமிழ்க் கல்வெட்டுகள் கூறுகின்றன. ஆயினும் அக்கல்வெட்டுகள் கூறும் ஆலயங்கள் எந்த இடங்களில் இருந்துள்ளன என்பது, பெரும்பாலும் இதுவரை அடையாளம் காணப்படாமலே உள்ளன. ஆனால், திருமங்களாயில் ஆலயம் பற்றிய கல்வெட்டுகளுடன் ஆலய அமைப்பையும், அதன் கலை மரபையும் அறியக்கூடிய அரிய பல ஆதாரங்கள் முதன் முறையாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாதாரங்கள் கிழக்கிலங்கை இந்துக்களின் வரலாறு, பண்பாடு பற்றிய எதிர்கால ஆய்வுகளில் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன.

4. இலங்கையில் அநுராதபுர இராசதானியில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு சில பௌத்த ஆலயங்களே தற்காலத்திலும் வழிபாட்டிற்குரிய ஆலயங்களாகக் காணப்படுகின்றன. ஆனால், அநுராதபுரத்திலும். இலங்கையின் ஏனைய இடங்களிலும் கண்டுபிடிக்கப்பட்ட பெரும்பாலான ஆதிகால, இடைக்கால ஆலயங்கள் இலங்கையின் மரபுரிமைச் சின்னங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டு, பிற்காலத்தில் அவை சுற்றுலாத் துறையின் முக்கிய மரபுரிமை மையங்களாகவே செயல்பட்டு வருகின்றன. ஆனால், திருமங்கலாய் சிவன் ஆலயம் கி.பி. 10ஆம் நூற்றாண்டிலிருந்து 1964 ஆம் ஆண்டு வரை அங்கு வாழ்ந்த மக்களின் பிரதான வழிபாட்டு ஆலயமாகவே இருந்துள்ளது. இந்த உண்மையை அவ்வாலயத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகளும், ஆலய மணியில் பொறிக்கப்பட்டிருக்கும் சாசனமும், அங்கு பரம்பரையாக வாழ்ந்து வந்த மக்களின் நில உரிமைப் பத்திரங்களும் உறுதிப்படுத்துகின்றன.

முற்றும்

# வியாழக்கிழமை தட்சிணாமூர்த்தி



சிவாலயங்களில் கல்லால மரத்தின் கீழ் தட்சிணாமூர்த்தி, சீடர்களுடன் தெற்கு நோக்கி வீற்றிருப்பார். இவர் பேசுவதில்லை. சைகை மூலம் உலகத்திற்கு பெரும் தத்துவத்தைச் சொல்கிறார். இவருக்கு ஊமைத்துரை, மௌனச்சாமி என்ற பெயர்கள் உண்டு. மௌனமாக இருப்பது வழிபாட்டு வகைகளில் ஒன்றாகும். மௌனத்தில் மூன்று வகை உண்டு. அவை உடல் மௌனம், வாக்கு மௌனம், மன மௌனம் என்பன.

உடலைச் சிறிதும் அசைக்காமல் கட்டைபோல இருப்பது உடல் மௌனம். இவர்கள் பத்மாசனத்தில் அமர்ந்து, சின்முத்திரை காட்டி, தியானத்தில் ஆழ்ந்திருப்பர். வாக்கு மௌனம் என்பது பேசாமல் அமைதி காப்பதாகும். மனதாலும் மௌனமாக இருப்பதே மன மௌனம்.

இந்த மௌனங்களைக் கடைபிடிப்பவர்கள் ஞானநிலை எய்துவதுடன், கடவுளோடுப் பேசி உறவாடும் சக்தியையும் பெறுகிறார்கள். மேலும், தொட்டது துலங்கும். ஸ்ரீ தட்சிணாமூர்த்திக்கு வியாழக்கிழமையில் செய்ய வேண்டிய பரிகாரங்கள் : வியாழக் கிழமை தோறும் சிவன் கோவிலுக்குச் சென்று, அங்குப் பிரகாரத்தில் உள்ள ஸ்ரீ தட்சிணாமூர்த்தி சுவாமிக்கு அர்ச்சனை அல்லது கற்பூர ஆரத்தி செய்து, வணங்கி வருவது நல்லது.

# முருகப் பெருமானின் நாமங்களும் விளக்கங்களும்

முருகப் பெருமானை நாம் பல்வேறுபட்ட பெயர்களால் அழைத்து வருகின்றோம். ஒவ்வொரு பெயரும் ஏதோ ஒரு காரணத்தின் அடிப்படையில் உதித்தவையாகும்.



**அழகன் –** முருகு என்றால் அழகு என்று பொருள். ஆகவே தான் அழகன் என்பதாகும்.

**முருகேசன் –** முருகனும் ஈசனும் இணைந்த சொரூபம் முருகேசன.

**சேயோன் –** சேய் என்றால் குழந்தை என்பதாகும். முருகன் குழந்தையாக காட்சியளிப்பதால் இந்த பெயர்.

**ஆறுமுகன் –** ஆறுமுகங்கள் உடையவன்.

**குமரன் –** குமர பருவத்தில் கடவுளாக எழுந்தருளியிருப்பவன்.

**சுவாமிநாதன்–** தந்தைக்கு பிரணவ மந்திரத்தை குருவாக உபதேசம் செய்தவன்.

**கந்தன் –** சிவபெருமானின் நெற்றிக்கண்ணில் இருந்து வெளிப்பட்ட தீ பொறி பொற்றாமரை குளத்தில் உள்ள தாமரை மலரின் நடுவே உள்ள கந்தகத்தில் பட்டு குழந்தையாக தோன்றியதால் கந்தன் என்று பெயர்.

**கார்த்திகேயன் –** கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டவன்.

**சண்முகம் –** அன்னை பராசக்தியால் ஆறு உருவமாக இருந்தவன் ஒன்றாக சேர்க்கப்பட்டு ஒரே முகமாக ஆக்கப்பட்டதால் சண்முகம் என அழைக்கப்பட்டான்.

**தண்டாயுதபாணி –** தண்டாயுதத்தை ஏத்தியவன்

**வடிவேலன் –** வேலை ஏந்திய அழகிய முருகனை இத்திருப்பெயரால் அழைப்பார்கள்.

**சுப்பிரமணியன் –** மேலான பிரமத்தின் பொருளாக இருப்பவன்.

**மயில்வாகனன் –** மயிலை தனது வாகனமாகக் கொண்டவன்.




ஆலயங்களுக்கான அறிவித்தல்!

'அகரதீபம்' இதழை பெற்றுக் கொள்வதற்கும், ஆலயங்களுக்கான விளம்பரங்களைப் பிரசுரிக்கவும் எம்மோடு தொடர்பு கொள்ளவும்

தொடர்புகளுக்கு

00 49 176 47 11 87 11

# சிரவண (ஆவணி) மாத சிறப்புகள்

'சிங்கத்திற்கு இணையான மாதமும் இல்லை; சிவனுக்கு இணையான இறைவனும் இல்லை' என்கிறார் அகத்திய மாமுனி. தமிழ் மாதங்களில் ஆவணி ஐந்தாம் மாதமாக வருகின்றது. கேரளத்தில் இதுவே முதல் மாதமாகவும், சிம்ம மாதமாகவும் கருதப்படுகின்றது. சிரவண நட்சத்திரம் என்று வடமொழியில் அழைக்கப்படும் திருவோணத்தில், பௌர்ணமி நாள் வருவதால்,

இது 'சிரவண மாதம்' என்றும் சிறப்பிக்கப்படுகிறது. இந்த மாதமே, வேதம் கற்றுக்கொள்ள தொடக்க மாதமாக இருந்து வந்துள்ளது. இன்று அது தேய்ந்து, தேய்ந்து வெறும் பூணூலை மாற்றிக் கொள்ளும் ஒரு சடங்கான மாதமாக மாறிப் போயுள்ளது என்கிறார்கள் ஆன்றோர்கள். இம்மாதத்தில்தான் சாதுர்மாஸ்ய விரதத்தின் உச்ச தினங்கள் வருகின்றன. இதனால் இந்த மாதத்தில் செய்யப்படும் வழிபாடுகள் முக்கியமானவை என்பர்.

பாற்கடலை அசுரர்களும், தேவர்களும் இணைந்து கடைய, அழுத்தம் தாளாத வாசுகிப் பாம்பு, 'ஆலகாலம்' என்னும் கொடிய நஞ்சை கக்கி விடுகிறது. இதனால் சகல தேவர்களும் அஞ்சி ஓட, தியாகத் திருவுருவான ஈசன், அந்த விஷத்தை தாம் ஏற்றுக்கொண்டு, சகல லோகங்களையும் காக்கிறார்.

ஈசனுக்கு எந்த ஆபத்தும் வராமல் இருக்க, சக்திதேவி தொண்டையைப் பற்றிக் கொண்டு, அவரை நீலகண்டன் என்றாக்குகிறார். அவர் உடல் உஷ்ணத்தால் மாறிவிடாது இருக்க, தேவர்கள் அவருக்குக் கங்கையால் அபிஷேகம் செய்து, தலையிலேயே கங்கை மற்றும் சந்திரனை அமர வைத்து, குளிர்ச்சியை உருவாக்குகிறார்கள். இது எல்லாம் நடைபெற்றது ஆவணியில் என்கின்றன புராணங்கள். இதனால் ஆவணி என்பது துன்பங்கள் நீங்கும் மாதம் என்றும், இது ஈசனுக்கு உரிய மாதம் என்றும் சொல்வர்.

'ஆடி மாதம் போய், ஆவணி வந்தால் ஆயிரம் நன்மைகள் தேடி வரும்' என்பார்கள். ஆவணியில் அத்தனை நாள்களும் மங்கல நாள்களே என்பது ஆன்றோர் வாக்கு. பெருமைமிகு இந்த மாதத்தில் தான் கணநாதர், கண்ணபிரான் திருஅவதாரங்கள் நடைபெற்றன. மாணிக்கவாசகருக்காக இறைவன் குதிரைகளைக் கொண்டு வந்து, மதுரையம்பதியில் ஒப்படைத்த ஆவணிமூல விழாவும் இந்த மாதத்தில் சிறப்பு. அரசர்களில் சிறந்தவரான மகாபலி மன்னன், வாமன மூர்த்திக்கு மூன்றடி தானம் கொடுத்தது, இந்த ஆவணி மாத சிரவண துவாதசி நாளில்தான். 'சிரவண தீபம்' என்று போற்றப்படும் ஆவணி மாத திருவோண நட்சத்திரத்தில் ஏற்றப்படும்.







# ஆடி மாதத்தில் ஆண்டியும் அரசானாகலாம்

**ஆ**டி மாதம் தெய்வங்களை வழிபட வேண்டிய முக்கியமான மாதமாகும். சில தமிழ் மாதங்கள் சைவ வழிபாட்டுக்கு ஏற்றதாகவும், சில மாதங்கள் வைணவ வழிபாட்டுக்கு ஏற்றதாகவும் இருக்கும். ஆனால், இரண்டு சமய தெய்வங்களுக்குமே உகந்த மாதம் என்றால் அது ஆடி மாதம்தான். தெய்வீகம் கமலும் இந்த மாதத்தில், சில சிறப்பான விசேஷ நாட்களில் சரியான முறையில் கடவுளை வழிபாடு செய்தால் பூரண நலனும், செல்வமும் வீட்டில் பெருகி, வளம் தரும் என்பது மக்களின் நம்பிக்கை.

**ஆடி வெள்ளி :** ஆடி மாதத்தின் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அம்மனுக்கு உகந்த நாளாகும். பார்வதி தேவியின் அவதாரமான 108 அம்மன்களுக்கும் இந்த நாள் சிறப்பு தரும் நாள். ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் அம்மனுக்கு விரதம் இருந்து, கோவிலுக்குச் சென்று நெய் விளக்கேற்றி வேண்டினால், பெண்களுக்கு மாங்கல்ய ஆயுள் நீடிக்கும் என்பது ஐதீகம்.

**ஆடி கிருத்திகை :** ஆடி மாதத்தின் கிருத்திகை நாள் முருகனுக்கு உகந்த நாள். இந்த நாட்களில் அறுபடை கோவில்களிலும் முருகப் பெருமானுக்குச் சிறப்பு அபிஷேகங்கள் நடைபெறும். கிருத்திகையின் போது முருகன் கோவிலுக்குச் சென்று வேண்டி வருவது சிறந்த பலனை தரும்.

**ஆடி பூரம் :** பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான ஆண்டாளுக்கு உகந்த நாள். இந்நாளில் பெருமாள் கோவில்களில் கன்னி பெண்கள் ஆண்டாள் பாசுரம் பாடினால், விரைவில் திருமணம் கைக்கூடும் என்பது ஐதீகம்.

**ஆடி அமாவாசை :** ஆடியில் வரும் ஒரே அமாவாசை நாள். இது இறந்த முன்னோர்களுக்கு உகந்த நாள். முன்னோர்களை இந்த அமாவாசை நாளில் வழிப்படுவதன் மூலம் அவர்கள் மோச்சமடைவர். மேலும், அவர்களது பரிபூரண ஆசீர்வாதங்களைப் பிள்ளைகள் பெற முடியும்.

**ஆடி பெருக்கு :** ஆடி மாதம் தமிழகத்தில் உள்ள ஆறுகளில் வெள்ளம் நுரை பொங்க ஓடும் நாள். இந்நாளில் நீர்நிலைகளில் விளக்கேற்றி மக்கள் வழிப்படுவர். இதன்மூலம் வீட்டில் இன்பமும், செல்வமும் ஆண்டுதோறும் நிறைந்திருக்கும் என்பது நம்பிக்கை.

**ஸ்ரீ வரலட்சுமி விரதம் :** பிரம்மரின் துணைவியும், அஷ்ட லட்சுமிகளின் மூலமுமான மகாலட்சுமிக்கு விரதம் இருக்கும் நாள் வரலட்சுமி விரதம். இந்த நாளில் விரதம் இருந்து மகாலட்சுமியை வழிபட்டால் சகல ஐஸ்வர்யங்களும் கிட்டும்.

இப்படி ஆடி மாதத்தில் வரும் அனைத்து விஷேச நாட்களிலும் தெய்வங்களை மனதார வணங்கி, வழிபட்டு வந்தால் அனைத்து செல்வங்களையும் பெற்றுச் சிறப்பாக வாழலாம். இதைதான் கேலியாக நமது முன்னோர்கள் 'ஆண்டியையும் அரசானாக்கும் ஆடி மாதம்' என்று சொல்லி வைத்துள்ளார்கள்.

# சைவ சமயத்தின் முதல் பெண் ஓதுவாமூர்த்தி மதங்க சூளாமணியார்




**சா**தி, பேதம் மட்டும் அல்ல, ஆண் - பெண் என்ற பால் பேதங்களையும் சைவம் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதே மதங்க சூளாமணியார் வரலாறு சொல்லும் பாடம். பெண்களைப் பெரிதும் போற்றும் சமயம் சைவம். பெண்களை அர்ச்சகர்கள் ஆக்கலாமா? என்று இன்றைய அரசு எண்ணி வருகிறது. ஆனால், குங்கிலியக் கலய நாயனார் வாழ்ந்த ஆறாம் நூற்றாண்டிலேயே, திருப்பனந்தாள் ஈஸ்வரன் கோயிலில், 'தாடகை' என்ற பெண் அர்ச்சனைகள் செய்யும் பூசகராக இருந்து இருக்கிறார் என்றும், அதனால் அந்தத் திருத்தலத்தின் ஈசன் பெயரே 'தாடகையீஸ்வரன்' என்றானதாகவும் பெரிய புராணம் தெரிவிக்கின்றது. தாடகை சூட்ட விரும்பிய மாலையை ஈசனே தலை தாழ்ந்து ஏற்றுக் கொண்ட நெகிழ்ச்சியான வரலாற்றை நீங்களும் அறிந்திருப்பீர்கள்.

இதுபோலவே சுமார் 1,400 ஆண்டுகளுக்கு முன்பே சைவ சமயத்தில் முதல் பெண் ஓதுவா மூர்த்தியாகக் கொண்டாடப்பட வேண்டியவர், நீலகண்ட யாழ்ப்பாணரின் துணைவியான மதங்க சூளாமணி அம்மையாரே!. சகோட யாழினை ஈசனே உருகும் வண்ணம் வாசிக்கும் திறன் கொண்டவர் நீலகண்ட யாழ்ப்பாணர். அவருக்கு இணையாகத் தாளமிட்டு, ஈசனின் திருப்பாடல்களைக் கல்லும் கனிந்துருகப் பாடும் அருள் கொண்டவர் இந்த அம்மையார். 'மதங்கர்' என்றால் இசைப் பாரம்பர்யம் கொண்ட ஒரு குலத்தின் பெயர். 'சூளாமணி' என்றால் ஒளிமிக்க மணி போன்றவர் என்று பொருள். ஆம், சூளாமணியாரின் இயற்பெயர் என்னவென்று தெரியவில்லை. இவரின் குலப்பெயரும், இசையால் பெற்ற பட்டமும் இணைந்தே 'மதங்க சூளாமணி' என்றானதாகவும் சொல்வார்கள்.

தில்லை அருகே உள்ள எருக்கத்தம் புலியூரில் அவதரித்தவர் திருநீலகண்ட யாழ்ப்பாணர். காரைக்காலுக்கு அருகே இருக்கும் தருமபுரம் என்ற ஊரில் அவதரித்தவர் மதங்க சூளாமணியார். பெரியோர்களின் ஆசியால் இருவரும் வாழ்க்கைத் துணையாக அமைய, ஈசன் குடிகொண்ட ஆலயங்கள் எங்கும் இவர்கள் சென்று ஈசனைப் பாடி, பணிந்து வந்தனர். யாழிசையால் ஈசனைப் யாழ்ப்பாணர் பணிய, மதங்க சூளாமணியார் பாடல் புனைந்துப் பாடுவார். ஈசனே தங்கள் தலைவன் என வாழ்ந்த இவர்களின் பெருமையை உலகரியச் செய்ய எண்ணிய ஈசன் மதுரையில் அதை நிறைவேற்றினார்.

மதுரை சொக்கனை யாழிசைத்துப் பணிய அங்கு சென்றார்கள். அப்போதைய வழக்கப்படி பாணர் குடி என்பதால்,

கோயிலின் வாசலில் நின்றவாறே யாழிசைத்தும், பாடியும் தொழுத அவர்களை, ஈசன் தன் திருமுன் அழைத்துவரச் சொன்னார். இது கண்டு இருவரும் நெக்குருகிப் பணிந்தனர். இதைத் தொடர்ந்து முப்புரம் எரித்த லீலை, யானை உரித்த வரலாறு, காமதகனம், அடிமுடி காண இயலாத அண்ணாமலையார் புராணம், எனப் புராண வரலாறுகள் பலவற்றை யாழில் இசைத்துப் பாடினர். ஈசனும் அவர்களின் இசையில் மயங்கி அவர்களை மேலும் கௌரவிக்கப் பொற்பலகை ஒன்று இடப்பட்டது. அதன் மீது நின்று யாழ் இசைத்தார் திருநீலகண்ட யாழ்ப்பாணர்.

திருவாரூரில் காலசம்ஹார மூர்த்தியின் அருளை யாழில் வாசித்து இசைத்த இவர், திருஞான சம்பந்த மூர்த்தியின் நெருங்கிய நண்பர் என்று ஆனார். சைவமே உயர்ந்தது; ஈசனே உயர்ந்தவர்; எனவே சைவத்தில் எந்த ஏற்றத் தாழ்வுகளும் இல்லை என்று வாழ்ந்து காட்டிய ஞானப்பிள்ளையாம் சம்பந்தர், சாதி வேறுபாடு இன்றி திருநீலகண்டரையும், அவரது துணைவியாரையும் மரியாதையோடு நடத்தினார். அவர்களை எங்கு அழைத்துச் சென்றாலும் உரிய வசதிகள் செய்து கொடுத்தார் என பெரிய புராணம் கூறும்.

திருச்சாத்தமங்கை எனும் ஊரில், மறையோர் குலத்தில் தோன்றிய திருநீலநக்க நாயனார் இல்லத்திற்கு திருஞானசம்பந்தர் எழுந்தருளினார். அவரோடு திருநீலகண்ட யாழ்ப்பாணரும், மதங்க சூளாமணி அம்மையும் வந்திருந்தனர். அவர்களைத் தங்க வைக்க, வேள்விச்சாலையினை ஒதுக்கித் தந்தார் திருநீலநக்கர் என்கிறது பெரிய புராணம். அதுபோலவே திருப்புகலூரில் இறைவனுக்கு மலர் தொடுக்கிற தொண்டினைச் செய்த முருக நாயனார், திருமடத்திலேயும் இவர்கள் எந்த பேதமும் இன்றி தங்கி இருந்தனர்.

சாதி பேதம் மட்டும் அல்ல, ஆண் - பெண் என்ற பால் பேதங்களையும் சைவம் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதே மதங்க சூளாமணியார் வரலாறு சொல்லும் பாடம். இதேபோல் செங்காட்டங்குடி, மதுரை யம்பதி என அநேக திருத்தலங்களில் ஞானசம்பந்த பெருமானோடு இணைந்து, இந்தத் தம்பதி இசைப்பணியும், இறைப்பணியும் செய்துள்ளார்கள். இறுதியாக நல்லூர் பெருமணத்தில் நடைபெற்ற திருமண விழாவில் தோண்டிய மாபெரும் பேரொளியில் சம்பந்தரோடும், இறை அடியார்கள் பலரோடும் கலந்து சிவனடி சேர்ந்தார்கள். யாழ்ப்பாணரும் அவர் மனைவியாரும் இறைவனைப் பாடுவது மட்டுமின்றி, சுமார் 1,400 ஆண்டுகளுக்கு முன்பே சைவப் பாடல்களை மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுத்ததும், இந்த அம்மையாரின் சாதனை எனலாம்.

பெரிய புராணத்தின் தகவல்கள் படி, பெண்களும் ஓதுவா மூர்த்திகளாக இருந்தார்கள் என்பதை, மதங்க சூளாமணியார் எடுத்துக் காட்டாக உள்ளார். அதுமட்டுமா! நம்பியாண்டார் நம்பி தேவாரங்களைச் சிதம்பரத்தில் மீட்டெடுத்து, திருமுறைகளைத் தொகுத்தார். அதற்கு மாமன்னர் ராஜராஜன் உதவி புரிந்தான். சமயக் குரவர் காலத்தில் இசைக்கப்பட்ட அதே பண் முறையில், திருமுறைகள் பாடப்பட வேண்டும் என்று ஈசனை வேண்டியபோது, நம்பிகளுக்கு ஈசன் காட்டிய ஒரு இசை வாணி 'வள்ளி'. இவள் மதங்க சூளாமணி அம்மையாரின் வழி வந்த இசைப்பாடகி. இவரும் எருக்கத்தம்புலியூரில் வாழ்ந்த ஒரு பெண் ஓதுவார் என்றே வரலாறு கூறுகின்றது. இவரே திருமுறைகளை பண் அமைத்து, இன்றுவரை ஓதுவா மூர்த்திகள் பாட வழி வகை செய்தவர் என்கிறது சைவ சமய நூல்கள்.



# பொன்னாலை வரதராஜப் பெருமாள்

அருட்பெருமையும், வரலாற்றுப் பழமையும் மிக்க திருமால் ஆலயங்களுள் ஒன்று பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவில். இலங்கையில் பழமையும், பெருமையும் மிக்கனவாக விழங்கும் சைவ மக்களின் ஆலயங்களான திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம், கதிர்காமம், நகுலேவரம், கீரிமலை முதலிய ஆலயங்களின் தோற்றம், பெருமை என்பன தக்ண கைலாச புராணத்தில் இவ்வாலயத்தின் தோற்றம் மகிமை என்பன கூறப்பட்டுள்ளது. இத்தக்ன கைலாசபுராணம் நைமிசாரண்ய முனிவர்கள் கோமதியாற்றங்கரையில் தீர்க்க சத்திரம் என்னும் ஞாகம் செய்து முடித்த போது சூதமுனிவரால் சொல்லப்பட்டதாகும்.

தக்ண கைலாச புராணத்திலே, பொன்னாலயப் பெருமை உரைத்த படலம் என்னும் அத்தியாயத்தில், இவ்வாலயத்தின் தோற்றமும், பெருமையும் சொல்லப் பட்டிருக்கிறது. முன்னொரு சமயத்திலே துர்வாச முனிவரால் தேவேந்திரன் சாபம் பெற்று, நீசத்தன்மையை அடைந்தான். அப்போது இந்திரன் "ஓ பகவானே! அத்திரி முனிவரின் குலத்தில் பிறந்தோய்! நான் செய்த பிழையைப் பெறுத்துக்கொள்க. என் சாபம் நீங்கும் பொருட்டு ஒரு உபாயம் கூறியருள்க. நல்ல விரதமுடையோய்!" என்று துர்வாச முனிவரைப் பிரார்த்தித்தான்.

இந்திரனால் பிரார்த்திக்கப்பட்ட முனிவருள் மேலானவராகிய துர்வாச முனிவர் இந்திரனைப் பார்த்து, "ஓ இந்திரனே! உன் சாப விமோசன காரியத்தில் துக்கம் அடைய வேண்டாம். சேது மத்தியிலிருக்கும் இலங்கையிலே, பொன்னாலையம் என்னும் பட்டனத்திலே, வலைஞர் குலத்திலே நீ பிறப்பாய். ஜனார்த்தனராகிய வாசு தேவர் ஒரு காலத்தில் கூர்மாவதாரம் எடுப்பார். (ஒரு சமயம் இந்திரனின் தாயின் மோதிரம் ஒன்று யாராலும் எடுக்க இயலாத வகையில் ஒரு பாதாளக்



கிணற்றுக்குள்ளே விழ, நாராயணர் ஆமையாகச் சென்று அதனை எடுத்துக் கொடுத்தார் என்றும், அந்தக் கூர்மமே இந்திரனுக்குச் சாபவிமோசனம் அளித்தது என்றும் வடமொழி தக்ண கைலாச புராணத்தில் விளக்கப்பட்டுள்ளதாம்) அக்கூர்மம் உன் வலையினாலே கட்டப்படும். இது மெய். அந்த ஆமையின் அங்கம் தீண்டப்பட்டவுடன் நீ சாபத்தினின்றும் விடுபடுவாய் என்று கூறி விட்டு, துர்வாச முனிவர் தம் இருப்பிடத்தை அடைந்தார்.

துர்வாசர் கூறியபடி வலைஞனாகப் பிறந்த இந்திரன், ஒரு நாள் இப்போது ஆலயம் அமைந்துள்ள இடத்திற்கு அருகில் உள்ள கடலில் வலை வீசினான். வலையில் ஒரு ஆமை அகப்பட்டது. அதனை அவனால் தனித்து கரை சேர்க்க முடியவில்லை. தன் இனத்தவரின் துணையை நாடி, அவர்களை அழைத்து வந்தான். வந்தவர்கள் அனைவருமே அங்கே ஒரு அதிசயத்தைக் கண்டனர். அச்சமயத்தில் ஆகாயமார்க்கத்தில் பொன்னொளி வீசும் விமானம் ஒன்று காணப்பட்டது. அதனைக்கண்டு அதிசயம் நிறைந்தவர்களாய் ஆமையின் பக்கத்தை விரைவாகச் சென்றடைந்தார்கள்.

அச்சமயத்தில் அந்த ஆமை கல்லாயிருப்பதைக் கண்டார்கள். இது என்ன அதிசயம்! என்று வியந்தார்கள். பின்பு அவர்கள் அனைவரதும் மனதில் இவ்வாமை இலக்குமி பதியாகிய நாராயணரே! என்றும், காணப்பட்ட விமானம் அவருடையதே! என்றும் ஒரு துணிவு உண்டானது. அத்துணிவை முன்னிட்டு நாராயணரின் பிரதிட்டைக்குரிய இந்த இடத்திலே, நல்ல நாளிலே, நல்ல முகூர்த்தத்திலே உத்தமபிராமணரைக் கொண்டு வைகாசன தந்திர விதிப்படி பிரதிட்டை செய்யும் காரியத்தை இப்பொழுதே செய்ய முற்படுவோம் என்று தீர்மானம் செய்தார்கள். அவர்கள் அப்படி முயற்சித்து விஷ்ணுவைப் பிரதிட்டை செய்து, வரதராசப் பெருமாள் என்று நாமகரணம் செய்து வழிபட்டார்கள்.

அவர்கள் பொன்னாலை ஆண்டவன் கிருபையினால், அதிக சந்தோஷம் கொண்டவர்களாய், நித்திய பூசை நடத்தி வந்தார்கள். அவர்கள் எல்லோரும் பொருட் செல்வத்தினாலும், விளைநிலச் செல்வத்தினாலும் நிறைவுடையவர்களாய் சுகத்துடன் வாழ்ந்தார்கள். மேலும் அவர்கள் எண்ணியவைகளையெல்லாம் அனுபவித்துப் புத்திர பௌத்திரர்களோடு கூடச் சுகமாய் வாழ்ந்திருந்தனர்.

பின்வரும் சூதமுனிவர், தன்னிடம் புராணம் கேட்டுக் கொண்டிருந்த பிராமணர்களைப் பார்த்து, "இந்திரனாலேயே கூர்ம வேடங் கொண்ட விஷ்ணு கட்டப்பட்டார். வலைஞனுடைய சாபமானது, ஆமையைத் தீண்டியவுடன் நீங்கியது. அங்கு தோன்றிய விமாணம் இந்திரனுடையதே!. சாபம் நீங்கியவுடன் அவ்விமாணத்தில் இந்திரன் சென்றான். விட்டுவாணவர் சாபம் நீங்கிய இந்திரனுக்கு, தன் திவ்விய லோகத்தைக் காட்டி அருள் புரிந்தார். அவ்வாறு காட்சி வழங்கிய போது, திருமாலின் திருவடிச் சுவடுபதித்த இடம் மிகவும் பரிசுத்தமானது.

இவ்விடத்திற்கு 'திருவடிநிலை' என்று பெயர் என கூறியதோடு, பொன்னாலைப் பெருமை உரைத்த படலத்தை தக்ண கைலாச புராணத்தில் படிப்பவர், கேட்பவர்களும் நாராயணன் அருளைப்பெற்று மன விருப்பங்கள் எல்லாம் நிறைவேறப் பெறுவர் என்றும், ஆவணிமாத கிருஷ்ணபட்ச அட்டமி திதியாகிய விசேட தினத்தில் பொன்னாலயத்திலே வாசம் செய்யும் லோகரட்சகராகிய அச்சுதப் பெருமானை யார் ஒருவன் அன்புடன் தரிசனம் செய்வானோ, அவனுடைய பாவங்கள் எல்லாம் அப்பிறவியிலே அக்கினியால் பஞ்சுப்பொதி அழிவது போல அழிந்துவிடும். அவன் இப்பிறப்பிலே எல்லா நலன்களையும் அடைந்து, மகிழ்ந்து மறுமையில் வைகுண்டலோகத்தை அடைந்து, களிப்புற்று வாழ்வான் என்று கூறினார்.

இப்புராணத்திலே பொன்னாலயத்திலே தரிசனம் வழிபாடு என்பன செய்வதற்கு உரியதாகச் சொன்ன தினத்தில், இவ்வுண்மையை அறியாதவரும் தரிசனம் செய்து நலன்கள் அடையத்தக்கதாக அன்று தேர்த்திருவிழா அமைய மகோற்சவம் நடை பெற்று வருவது வரதராஜப் பெருமாளின் அருட் சிறப்பேயாகும்.

**தொடரும்...**



# ஆடி மாத விரதங்கள்

ஆடி மாதம் பெண்மை எனும் சக்திக்குப் பெருமை சேர்க்கும் மாதமாகும். ஆடி மாதத்தில் விரதம் இருந்து வழிபாடு செய்ய வேண்டிய முக்கிய விழாக்களைப் பற்றி இங்கே பார்க்கலாம்.

ஆடி மாதம் பெண்மை எனும் சக்திக்கு பெருமை சேர்க்கும் மாதமாகும். சூறைக் காற்றோடு அம்மனின் அருட்காற்று அரவணைக்கும் மாதமாக ஆடி மாதம் திகழ்கிறது. இந்த மாதத்தில் விழாக்கள் வரிசை கட்டி நிற்கும். ஆடி முதல் நாள் தொடங்கி, கடைசி நாள் வரையும் கொண்டாட்டங்களுக்குக் குறைவிருக்காது. ஆடி மாதத்தில் விரதம் இருந்து வழிபாடு செய்ய வேண்டிய முக்கிய விழாக்களைப் பற்றி இங்கே பார்க்கலாம்.

**ஆடி தபசு :** ஒரு முறை அம்பாள், சிவபெருமானிடம் ஒரு வரம் கேட்டாள். அதாவது விஷ்ணுவுடன் இணைந்து காட்சி தர வேண்டும் என்பது அவளது கோரிக்கை. உடனே சிவபெருமான், "பொதிகை மலையில் புன்னை வனத்தில் தவம் புரிந்தால், அந்தக் காட்சி காணக் கிடைக்கும்" என்றார். அம்பாளும் ஒற்றைக் காலில் ஊசிமுனையில் நின்று தவம் செய்தாள். இதையடுத்து ஆடி பவுர்ணமி நாளில், பார்வதியின் வேண்டுகோளை நிறைவேற்றி 'சங்கர நாராயணர்' கோலத்தில் இறைவன் காட்சி அளித்தார். அம்பிகை கோமதி அம்மனாக வடிவம் கொண்டு, அந்தக் காட்சியைக் கண்டு தரிசனம் செய்தார். இந்த விழா இன்றும் பாரம்பரியமாக சங்கரன்கோவில் திருத்தலத்தில் நடைபெற்று வருகிறது.

**ஆடிப்பூரம் :** அம்பாளுக்குரிய விசேஷ தினங்களில் ஒன்று ஆடிப்பூரம். ஆடி மாதத்தில் வரும் பூரம் நட்சத்திரத்தில் இந்த விழா

கொண்டாடப்படுகிறது. இந்த நல்ல நாளில்தான் உமாதேவி அவதரித்ததாக புராணங்கள் கூறுகின்றன. உலக மக்களை காப்பதற்காக அம்பாள், சக்தியாக உருவெடுத்த தினம் ஆடிப்பூரம். இந்த சைவ ஆலயங்களில் மட்டுமல்லாது, வைணவ தலங்களிலும் வெகுசிறப்பாக நடைபெறும். ஏனெனில் ஆண்டாள் அவதரித்த தினம் ஆடி மாதத்தில் வரும் பூரம் நட்சத்திரம் ஆகும்.

**ஆடி அமாவாசை :** ஆடி அமாவாசையை பித்ருக்கள் தினமாகக் கொண்டாட வேண்டும். அன்றைய தினம் மறைந்த நம் முன்னோர்களுக்கு தர்ப்பணம் நிறைவேற்றினால், ஆறு மாதம் தர்ப்பணம் செய்த பலன் கிடைக்கும். சூரிய பகவான் ஆண்மை, ஆற்றல், வீரம் போன்றவற்றை தரும் ஆற்றல் படைத்தவர். மனதுக்கு அதிபதியான சந்திரன், மகிழ்ச்சி, தெளிந்த அறிவு, இன்பம், உற்சாகம் போன்றவற்றை தரவல்லவர். இத்தகைய பெருமைகளை எல்லாம் தருகின்ற சூரிய, சந்திரர்களை, தாய்- தந்தையை இழந்தவர்கள் அமாவாசை தினங்களில் வழிபாடு செய்வது சிறப்பான ஒன்றாகும். தட்சிணாயன காலத்தில் வரும் முதல் அமாவாசை என்பதால், ஆடி அமாவாசை சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது.

**ஆடி கிருத்திகை :** கார்த்திகை நட்சத்திரம், முருகப்பெருமானுக்கு உகந்த நட்சத்திரம். மாதம்தோறும் வரும் கிருத்திகை நட்சத்திரம் சிறப்பானது. ஆடி மாதத்தில் வரும் கிருத்திகை நட்சத்திரம் கூடுதல் சிறப்பு கொண்டது. உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் தங்கள் பிரார்த்தனைகளையும், நேர்த்திக் கடன்களையும் செலுத்த முக்கிய நாளாக இந்த நாளை தேர்வு செய்கிறார்கள். ஆடி மாதத்தில் இருந்து தொடங்கி ஆறு மாதங்கள் கார்த்திகை விரதம் இருந்து தை மாதக் கார்த்திகையில் விரதத்தை முடித்தால், சகல சவுபாக்கியங்களும் கிடைக்கும் என்பது ஐதீகம்.

### ஆடி செவ்வாய்.. ஆடி வெள்ளி..

‘ஆடி செவ்வாய் தேடிக்குளி’ என்பார்கள். ஆடி மாதம் வரும் செவ்வாய்க்கிழமை தோறும் சுமங்கலிப் பெண்கள் மஞ்சள் பூசிக் குளிப்பதால், மாங்கல்ய பலம் கூடும் என்பதே இந்த பழமொழி கூறும் தத்துவம். அதேபோன்று ஆடி மாதச் செவ்வாய்க்கிழமைகளில் பெண்கள் பலரும், ‘அவ்வையார் விரதம்’ கடைப்பிடிப்பார்கள். கணவனின் ஆயுள் நீடிக்கவும், குழந்தை வரம் வேண்டியும், குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கவும், கன்னிப் பெண்களுக்கு விரைவில் திருமண வரம் கிடைக்கவும் இந்த விரத வழிபாட்டின் மூலம் பிரார்த்தித்துக் கொள்வார்கள். ஆடி வெள்ளிக்கிழமையன்று சுமங்கலிப் பெண்கள் கணவனின் ஆயுள் அதிகரிக்கவும், திருமணமாகாத பெண்கள் விரைவில் திருமணம் கைகூடி வரவும் விரதம் மேற்கொள்வார்கள்.

**ஆடி பெருக்கு :** ஆடி மாதத்தில்தான் தென்மேற்குப் பருவ மழை வலுவடைந்து, காவிரியின் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் புது வெள்ளம் பெருக்கெடுத்து ஓடி வரும். அப்படி ஆடியில் காவிரி பெருக்கெடுத்து வருவதைத்தான் மக்கள் ‘ஆடிப்பெருக்கு’ என்று கொண்டாடுகிறார்கள். இந்த விழாவானது ஆடி மாதம் 18-ந் தேதி கொண்டாடப்படும். காவிரி கரையோரங்களில் இந்த விழா களைகட்டும். காவிரி அன்னைக்கு சீர் செய்து வணங்குவது வழக்கமாக உள்ளது. தாமிரபரணி கரையிலும் ஆடிப்பெருக்கு உற்சாகமாகக் கொண்டாடப்படுகிறது.

# புரட்டாசி மாத சிறப்பு?

புரட்டாசி மாதம், தமிழ் மாதங்களில் ஆறாவது மாதமாகும். சூரியன் கன்னி ராசியில் இருக்கும் நாட்களைத்தான் நாம் புரட்டாசி மாதம் என்கிறோம். பெருமாளுக்கு உகந்த மாதம் புரட்டாசி. புரட்டாசியில் பக்தர்கள் விரதமிருந்து பெருமாள் கோவிலுக்குச் சென்று வழிபடுவார்கள்.

புரட்டாசி என்றாலே திருமலை, திருப்பதியும் அங்கு உறையும், திருவேங்கடவனும் நம் நினைவுக்கு வருவர். புரட்டாசி மாதம் புனித மாதமாக இருப்பதாலும், பெருமாளுக்கு உகந்த மாதமாக இருப்பதாலும் வைணவ கோவில்களில் சிறப்பு பூஜைகள் நடத்தப்படும். முன்னோர்களின் ஆசியை பெற்றுத்தரும் மிக அற்புதமான மாதம் புரட்டாசி மாதமாகும். புரட்டாசி சனிக்கிழமைகளில் பெருமாளுக்கு மாவிளக்கு ஏற்றி வழிபாடு செய்வது சிறப்பை தரும். திருப்பதியில் புரட்டாசி சனிக்கிழமைகளில் வழிபாடு செய்வது மிகவும் சிறப்பாகும். புரட்டாசி சனிக்கிழமை விரதத்தை மேற்கொண்டால் குலதெய்வத்தின் அருள் கிடைக்கும், செல்வம் செழிக்கும் மற்றும் துன்பங்கள் விலகும். புரட்டாசி மாத சனிக்கிழமைகளில் சனிபகவானை நினைத்து விரதமிருந்தால் சனி தோஷம் நீங்கும்.



### புரட்டாசி மாதத்தில் ஏன் அசைவம் சாப்பிடக் கூடாது?

புரட்டாசி மாதம் வெயிலும், காற்றும் குறைந்து மழை ஆரம்பிக்கும் மாதம். இது வெயில் கால வெப்பத்தை காட்டிலும் கெடுதல் தரக்கூடியது. இந்த நேரத்தில் அசைவம் சாப்பிடுவது உடல் சூட்டை அதிகப்படுத்தி உடல் நலத்தை குறைக்கும். அதனால் தான் புரட்டாசி மாதத்தில் அசைவத்தை ஒதுக்கி வைத்தனர் நம் முன்னோர்கள்.

### புரட்டாசி அமாவாசை :

மறைந்த நமது முன்னோர்கள் மொத்தமாக ஒருசேரக் கூடும் காலமே மகாளய பட்சம் என்று கருதப்படுகிறது. பட்சம் என்றால், 15 நாட்கள் என்பது பொருள். அதாவது மறைந்த நமது முன்னோர்கள், 15 நாட்கள் நம்மோடு தங்கக்கூடிய காலங்களை மகாளய பட்சம் என்று கூறுகிறோம். மகாளய பட்சம், புரட்டாசி மாத பௌர்ணமிக்கு மறுநாள் பிரதமை திதியில் துவங்கி அமாவாசை வரை நீடிக்கிறது. புரட்டாசி மாதத்தில் வரக்கூடிய அமாவாசையே, மகாளய அமாவாசை என்று அழைக்கப்படுகிறது.

# விநாயகர் சதுர்த்தி

ஆண்டு தோறும் 'ஆவணி மாத சுக்ல சதுர்த்தியன்று மண்ணாலான என் உருவத்தை பொன்னால் செய்த பாவனையுடன் அமைத்து பல பூக்களால் பூஜித்த பின் இரவில் கண் விழித்து முறையாகப் பூஜித்தால், அவ்வாறு செய்பவனுக்கு அவன் தெடங்கிய காரியத்தில் வெற்றியையும், ஸகல காரியங்களில் சித்தியையும் அளிக்கிறேன்' என்று விநாயகரே சந்திரனுக்குக் கூறுவதாக அமைந்துள்ளது.

சியமந்தக மணி என்ற ரத்தினத்தின் காரணமாகப் பல அபவாதங்களுக்கு ஆளான கிருஷ்ணனுக்கு நாரதர் இக்கதையைக் கூறி, கிருஷ்ணனே சங்கடஹரண சதுர்த்தி பூஜை செய்து அவப்பெயர் நீங்கப் பெற்றார் என்று அறிகிறோம்.

இந்து மக்கள் அனுட்டிக்கின்ற விரதங்களில் விநாயக சதுர்த்தி விரதம் முக்கியமான ஒன்று ஒவ்வோர் ஆண்டும் ஆவணி மாதச் சுக்கிலபட்ச சதுர்த்தித் திதியன்று விநாயக சதுர்த்தி அனுட்டிக்கப் படுகின்றது. அன்றைய தினம் உலகெங்கணுமுள்ள இந்துக்கள் பய பக்தியோடு விநாயக வழி பாடியற்றி, உண்ணா நோன்பிருந்து, தான தர்மங்கள் செய்து கொண்டாடுகின்றனர். நாட்டுக்கு நாடு அந்தக் கொண்டாட்டங்கள் வேறுபட்ட முறைகளில் கொண்டாடப் படுவதைக் காணலாம்.

## பிள்ளையாரின் அவதாரம்

ஆவணி மாதம் சுக்ல பட்ச சதுர்த்தி தினத்தில் அதிகாலையில் எழுந்தி மூஷிக வாகனனை முழு மனதோடு நினைத்து நீராட வேண்டும். பூஜை அறையில் சுத்தமான மனப்பலகை வைத்து அதன் மீது கோலம் போட வேண்டும். அதன் மேல் தலைவாழை இலை ஒன்றை வடக்கு பார்த்து வைத்து அதன் மேலே பச்சரிசியை பரப்பி வைக்க வேண்டும். அதன் பின்னர் பூஜை ஆரம்பிக்க வேண்டும்.

ஒவ்வோர் ஆண்டிலும் விநாயகருக்கான விரத நாட்கள் அனேகமாக சதுர்த்தித் திதியன்றே கூடுவதை அவதானிக்கலாம் சுக்கில பட்ச சதுர்த்தி என்றும் கிருஷ்ண பட்ச சதுர்த்தி என்றும் இரண்டு சதுர்த்தி விரத தினங்கள் மதாந்தம் சம்பவிக்கின்றன சுக்கில பட்சச் சதுர்த்தியை 'சதுர்த்தி விரதம்' என்று கொள்வர். அவற்றுள்ளும் ஆடி மாதத்தில் வருகின்ற சுக்கில பட்சச் சதுர்த்தியை 'நாக சதுர்த்தி' என்றும் ஆவணி மாதத்தில் வருகின்ற சுக்கில பட்சச் சதுர்த்தியை 'விநாயக சதுர்த்தி' என்றும் கைக்கொள்கின்றனர்.




19
ஆண்டில்....
Radio - by - Phone
ETR
ஐரோப்பிய தமிழ் வானொலி
அழையுங்கள்! வானொலியைக் கேட்டு மகிழுங்கள்..!!
00 4934 5483411998
தொலைபேசி இலக்கத்தில்
ஐரோப்பியத் தமிழ் வானொலி
நேரடி நிகழ்ச்சிகளில் பங்குபெற அழையுங்கள்
00 49 231 700 977 60
மேலதீக விபரங்களுக்கு... www.etr.fm
மகிழ்வுடன்....
அகரம்
அகர தீபம்
ETR NEWS
ETR Music